உ
சிவமயம்

குமரகுருபரன்

மலர் 26] ஆவணி மீ 1-ம் உ (17-8-75) [இதழ் 8

தனிப்பிரதி 45 பைசா வருடச் சந்தா ரூ 5-00

த. 3119

ஆசிரியர் குழு.

1. திரு. Dr. K. சிவராமன் அவர்கள், M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்.
காசிச் சர்வகலாசாலை, காசி

2. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M.A., B.O.L.
ஓய்வுபெற்ற செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸ்பால், திருப்பனந்தாள்,

3. திரு பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A..
ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.

4, திரு. டி. எச், விவேகானந்தம்பிள்ளை அவர்கள் [J. P.]
B. A. L. T. ஓய்வுபெற்ற அசிஸ்ட்டண்டு கமிஷனர், சென்னை-86

5. Dr. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A Phd.
அஞ்சல் வழிக்கல்வித்துறை, மதுரை பல்கலைக்கழகம். மதுரை-2

K. சுப்பிரமணிய பிள்ளை,
கௌரவ நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

பக்கம்

1. திருவுந்தியார்—உரை விளக்கம் ... 385
2: அருள்மொழி அமுது ... 389
3, என்று வந்தாய்? ... 392
4. அலங்கார நாயகன் (14) ... 395
5. அன்னையின் அன்பு 401
6. ஸ்ரீ சுப்ரமண்ய புஜங்கம் ... 406
7. திருமுருகாற்றுப்படை உரை விளக்கம் ... 408
8. இழுக்கும் பழனியப்பன் ... 414
9. சிவலிங்கப் பெருமான் ... 418
10. ஆடஎல்லான் ... 423
11. குமரகுருபர சுவாமிகள் சரித்திரம் ... 425
12. மூன்றும் திருமுறையின் முதற்பாடல்கள் ... 431

T-UN-449

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 26 | இராக்ஷஸ ௵ ஆவணி ௴ 1௳ [17-8-75] | இதழ் 7

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனார்
அருளிய
திருவுந்தியார்—உரைவிளக்கம்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் பாலகவி
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை

(மலர்–26 340ம்–பக்கத் தொடர்ச்சி)

எட்டுக்கொண் டார்தம்மைத் தொட்டுக்கொண் டேநின்றார்
விட்டார் உலகமென் றுந்தீபற
வீடேவீ டாகுமென் றுந்தீபற. 24

மண்ணும் நீரும் தீயும் காற்றும் வானும் மதியும் கதிரும் உயிரும் ஆகிய எட்டையும் தமது திருமேனியாகக் கொண்டு விளங்குகின்ற சிவபரம் பொருளை இடையீடின்றிச் சிந்தித்துக் கொண்டு மெய்ஞ்ஞான நிட்டை கூடியிருப்பவர், உலகமும் உயிர்களும் தமது ஆன்ம நிறைவுக்குள் அடங்கியிருக்கக் காண்பாராயினும், அவ்வுலகுயிர்களிலிருந்து நீங்கிச் சிவபரம் பொருளுடன் ஒன்றியேயிருப்பர். அங்ஙனம் உலகுயிர்களை விட்டு நீங்கியிருத்தலே பரமுத்தியாகும்.

சிவபெருமான் தடத்த நிலையில் உலகுயிர்களைக் கலந்து நிற்கும் போது, ஐம்பூதங்களும் சந்திர சூரியர்களும் ஆன்மாவும் ஆகிய எண்வகைத் திருமேனிகளைக் கொண்டருளுகின்றாரென்று, அருள் நூல்கள் கூறுகின்றன. "இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி இயமான னாயெறியும் காற்றும் ஆகி, அரு நிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாச மாயட்ட மூர்த்தியாகி" என்பது அப்பரடிகள் திருவாக்கு. மேற்கண்ட எட்டையும் சரீரமாகக் கொண்டு, அவற்றின் சரீரியாகச் சிவபெருமான் இருத்தலினாலேயே "எல்லாம் பிரமசொரூபம்" என்றுவேதம் கூறியது. சிவபெருமானை "விசுவரூபன்" என்பதும் இக்கருத்துப் பற்றியேயாகும். அண்ட பிண்டங்கள், இவ்வெட்டினுள் அடங்கியனவே. அண்டம் பூதங்களினதும் சூரிய சந்திரர்களதும் உயிர்களதுமாகிய தொடர்பில் நிற்பது கண்கூடு, பிண்டமாகிய நமது தேகம் பஞ்சபூதங்களின் சேர்க்கையால் அமைந்தது. சந்திர சூரிய மண்டலங்களைக் கொண்டு உயிரின் சேர்க்கையுடன் இருப்பது, அட்ட மூர்த்தமாகிய இவ்வெட்டில் அடங்காததும், இவ்வெட்டின் உதவியை வேண்டாததும் எங்குமேயில்லை. எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிற அட்டமூர்த்தம் சிவபெருமானது திருவுருவமாயிருத்தலினாலேயே "சர்வம் சிவமயம்" என்றும் "சிவனொருவனே சர்வ வியாபகன்' என்றும் சொல்லப் பெறுகின்றன. எல்லா வடிவங்களும் இந்த நியதிப்படி சிவவடிவங்களாகவேயிருக்கின்றன. அதனால் எந்த வடிவத்தில் எந்தக் கடவுளரைப் பூசித்து வழிபட்டாலும், அவ்வழிபாடு சிவவழிபாடாகவே வந்து முடியும். இதனையே "யாதொரு தெய்வம் கொண்டீர்

அத்தெய்வம் ஆகி ஆங்கே, மாதொரு பாகனர்தாம் வருவர்'' என்று சிவஞான சித்தியார் அறுவுறுத்தியருளுகிறது. இத் திருப்பாடலின் உள்ளீட்டையறியாமல் தெய்வ சமரசம் பேசுகின்ற சில ஏழையறிஞர்கள் சிவத்துடன் சமமாக மற்ற தெய்வங்களையும் பேசிப் பழிபாவங்களைச் சுமந்து கொள்ளுகிறார்கள். எல்லாத் தெய்வங்களாகவும் சிவபெருமானே வருகிறார் என்பதிலிருந்து, ஏனைத் தெய்வங்கள் சிவபெருமானுக வரமுடியாதென்பது தெளிவாகத் தெரிந்தும், சிவபரத்துவத்தில் இவர்களுக்கு ஊற்றம் உண்டாகாதிருப்பது, இவர்களது முன்னைத் தீவினைப் பயனேயன்றி வேறெதுவாயிருக்க முடியும்?

அட்டமூர்த்தங்களுள் ஆன்மாவும் ஒன்று என்று சொல்லப் பெறுவதால் சிவபெருமானுகிய தேகியும் ஆன்மாவாகிய அவரது தேகமும் வெவ்வேறானவை என்பது நன்கு புலப்படும். ''ஒற்றுமை நயத்தின் ஒன்றெனத் தோன்றினும், வேற்றுமை நயத்தின் வேறே உடலுயிர்'' என்பது இலக்கணச் சூத்திரம். இங்ஙனம் வெவ்வேறாயுள்ள உடலுயிர்களான சீவான்ம பரமான்மாக்களை ஒன்று என்று சொல்லுவது பொருந்தாததென்பதற்கும் அட்டமூர்த்த வடிவம் ஆதாரமாயிருக்கிறது. சிவபெருமானுகிய பிரமம் உயிரிலும் உயிரில் பொருள்களிலும் கலந்து நிற்பதேயன்றி, அவையாகவே திரிந்து நிற்பதில்லை.

சித்தாந்த சைவர்கள், சிவயோகத்தை மேற்கொண்டு எப்போதும் அட்டமூர்த்த வாழ்வாகிய சிவபரம் பொருளைத் தொட்டுக் கொண்டேயிருப்பவர்கள். அண்ட பிண்டங்களனைத்தையும் அடக்கிக் கொண்டிருக்கிற அட்டமூர்த்தமாய் எல்லாவற்றிலும் கலந்திருக்கிற சிவபரம் பொருளைத் தம் உயிரினிடத்து விளங்கக் கண்டு உள்வழிபாடாற்றும் சிவ யோகிகள், உலகுயிர்களைக் காணும் காட்சியை விட்டுச் சிவ மொன்றையே காண்பார்கள். ஞான நாட்டம் பெற்ற சிவ யோகியர், சிவபெருமானது பெருந் தன்மையை முன்னர் உணர்ந்து பின்னர்த் தன்னையும் பிறரையும் கண்டு இறுதியில்

சிவத்தைக் கண்டு அதனேடொன்றி மகிழ்வர். இதனை ''மாயப் படலம் கீறித் தூய, ஞான நாட்டம் பெற்றபின் யானும், நின்பெரும் தன்மையும் கண்டேன் காண்டலும், என்னையும் கண்டேன் பிறரையும் கண்டேன். நின்னிலை அனைத்தையும் கண்டேன் என்னே, நின்னைக் காண மாந்தர், தன்னையும் காணத் தன்மையோரே'' என்னும் பட்டினத் தடிகள் திருவாக்கினல் அறியலாம்.

மெய்ஞ்ஞானிகள் நம்மைப் போலத் தநுகரண புவன போகத் தொடர்புடையவர்களாகக் காணப்படினும், அவர்கள் அவற்றில் படாது நீங்கியிருக்கும் பேறு பெற்றவர்கள். அங்ஙனம் நீங்கியிருக்கும் அதுவே சீவன்முத்தி என்று சொல்லப் பெற்றுத் தேகாந்தத்தில் அவர்களுக்குப் பரமுத்திக்கு ஏதுவாயிருக்கும்.

———

(தொடரும்)

" ஞானசம்பந்தம் "

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளி வருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்'

உள்நாடு ரூ. 6-00 வெளிநாடு ரூ. 10-00

செயலாளர், '' ஞானசம்பந்தம்'' அச்சகம் ''

தருமபுரம், மாயூரம் P. O.

சிவ சிவ]

அருள் மொழி அமுது

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி.
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

23. வேய்ங்குழலூதி வேதநாயகனையடைந்த வித்தகர்

திருச்சியில் கொள்ளிடத்திற்கு வடக்கே உள்ளது மழநாடு. இந்நாட்டு அந்தணருக்கு மழநாட்டுப் பிரகசரணத்தார் எனப்பெயர். இது மேன்மழநாடு. கீழ்மழநாடு என்ற இரு பிரிவுகளையுடையது. மேன்மழநாட்டிற்கு இக்காலம் லால்குடி என்று அழைக்கப்பெறும் திருத்தவத்துறை தலைநகர். கீழ்மழநாட்டிற்குத் திருமழபாடி தலைநகர். லால்குடிக்கு வடமேற்கில் பூவாளூருக்கு அண்மையில் மங்கலம் என்ற ஊர் உள்ளது.

இத்தலத்தில் பரசுராமர் பூசித்துத் தாய்க்கொலைப்பழி நீங்கினர் என்பர். இறைவனின் பெயர் பரசுராமீஸ்வரம் உடையவர். அவ்வூரில் ஆயர்குலத்தை விளக்க வந்து உதயமானவர் ஆனாயர். திருநீறு பூசுவதும், திருநீறு பூசினவரை வணங்கிப் போற்றலும் ஆகிய திருநீற்றுத் தொண்டு புரியக் கூடியவர். வாயில் சிவநாமமும், மனத்தில் சிவபெருமானின் திருவடியும், உடலால் சிவபெருமானுக்கான சேவையும் செய்பவர்.

> ஆயர் குலத்தை விளக்கிட வந்துதயஞ் செய்தார்:
> தூய சுடர்த்திரு நீறு விரும்பு தொழும்புள்ளார்:
> வாயினின் மெய்யின வழுத்து மனத்தின் வினைப்பாலிற்
> பேயுடனுடு பிரானடியல்லது பேணுதார்

தினமும் பசுக் கூட்டங்களை ஊருக்கு வெளியில் அழைத்துச் சென்று, நோய்வராத வண்ணம், கொடிய விலங்குகள் அவற்றைத் துன்புறுத்தாத வண்ணம் காத்து, தூயபுல்லும் நீரும் குடித்து சுகமாக இருக்கும்படி பாதுகாத்தார். தொழுவங்கள் நிறைய கன்றுகளும், கறவைமாறிய இளம்பசுக்கள், கறவைப் பசுக்களும், கருப்பமடைந்து தளர்ந்த பசுக்களும், சமீபத்தில்

கன்று போட்ட பசுக்களும் இருந்தன. ஆனயநாயனர் புல் லாங்குழல் ஊதும் வழக்கத்தை மேற்கொண்டார். உலகம் அவரது இசையில் மயங்கியது. ஒரு நாள் ஆனயர் அலங் காரஞ் செய்து கொண்டு இடையர்கள் புடைசூழப் பசுக் கூட்டங்களுடன் காடு சென்றார், போகும் வழியில் கொன்ற மரத்தைக் கண்டார். கொன்றைமலர் அவருக்கு சிவபெரு மானை நினைவுறுத்தியது. தன்னையறியாமல் குழலெடுத்து ஊத லானார்.

அவரது கீத விநோதம் கேட்டு மாடுகள் அசைபோட மறந்தன. கன்றுகள் பால்குடிப்பதை மறந்தன, பாதி வேலையை விட்டு பிரமித்து நின்றனர் இடையர்.

ஆனிறைகள் அறுகருந்தி அசைவிடாதணைந்தயரப்
பானுரை வாய்த் தாய்முலையில் மற்றும் இளங்கன்றினமும்
தானுணவு மறந்தொழியத் தடமருப்பின் விடைக்குலமும்
மான் முதலாம் கான் விலங்கும் மயிர்முகிழ்த்து வந்தணைய,

ஆடுமயில் இனங்களும் அங்கசைவயர்ந்து மருங்கணுக
ஊடுசெவி இசை நிறைந்த உள்ளமொடு புள்ளினமும்
மாடுபடிந் துணர் வொழிய மருங்கு தொழில் புரிந்தொழுகும்
கூடிய வண் கோவலரும் குறைவினையின் துறைநின்றார்,

என்கின்றது சேக்கிழார் பெருமானின் திருவாக்கு.

இசைக்கு இறைவனே உருகுகின்றேன். மதுரையில் பாணபத்திரன் என்ற இசை வல்லானின் பக்திக்கு உருகிய இறைவன் விறகாளாகவே வரவில்லையா? கோயிலை தூசு தும்பில்லாமல் கூட்டிப்பெருக்கினால் இன்பமடைவர். கோயிலை மெழுகிச் சுத்தப்படுத்துபவருக்கு அதைக் காட்டி லும் பத்து மடங்கு இன்பம் உண்டு. நல்லமலர் தொடுத்தால் சிவலோக பதவி கிட்டும். திருவிளக்கிட்டவர்க்கு ஞானம் கிடைக்கும். இறைவனுக்குக் கீதம் பாடியவர்க்கு என்ன கிடைக்குமென்று அளவிட்டுக் கூறவே முடியாது.

விளக்கினால் பெற்ற இன்பம் மெழுக்கினால் பதிற்றியாகும்
துளக்கினன் மலர்தொடுத்தால் தூயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின மெய்ஞ்ஞெறி ஞானமாகும்
அளப்பில கீதஞ் சொனனார்க் கடிகடா மருளுமாறே

என்பது அப்பர் தேவாரம். 4-77-3

உலகமெலாம் பரவிய ஆனய நாயனரின் குழலோசை பொதுவில் நடம்புரியும் இறைவனது திருச்செவியிலும் கேட்டது. சப்தப்ரமஸ்வரூபராகிய இறைவர் தவத்தின் உருவான அம்மையுடன், நாயனரின் இசை இன்பத்தைக் கேட்பதற்குத் தனது தலையைச் சாய்த்துக் கொண்டே வந்தனர்.

ஆனயர் குழலோசை கேட்டருளி அருட்கருணை
தானய திருவுள்ளம் உடையதவ வல்லியுடன்
கானதி காரணராம் கண்ணுதலார் விடையுகைத்து
வானுறு வந்தடைந்தார் மதிநாறுஞ் சடைதாழ.

துந்துபி முதலான தேவ வாத்யங்களை நிறுத்தி, குழலின் இனிமையே போதுமென அவ்விடம் வந்த இறைவர் "இந் நின்ற நிலையே நம்முடன்வா" என அழைத்துச் சென்றார். எப்போதும் இறைவனுக்குக் குழல் வாசிக்கும் பேறு பெற்று விளங்குகின்றார் ஆனயநாயனர்.

"அலைமலிந்த புனல் மங்கை ஆனயர்க் கடியேன்"

ஆனய நாயனர் திருவடிகளே சரணம்
சேக்கிழார் திருவடிகளே சரணம்
இலைமலிந்த சருக்கம் முற்றிற்று.

சுந்தரமூர்த்தி நாயனர் துதி

தீதுகொள் வினைக்கு வாரோம்;
செஞ்சடைக் கூத்தர் தம்மைக்
காதுகொள் குழைகள் வீசும்
கதிர் நிலவிருள் கால்சீப்ப
மாது கொள் புலவி நீக்க
மனையிடை இருகால் செல்லத்
தூது கொள்பவராம் நம்மைத்
தொழும்பு கொண்டுரிமை கொள்வார்

-திருச்சிற்றம்பலம்-

என்று வந்தாய்?

திரு: ஆ. சண்முகநயினர் HCD அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
திருச்சிராப்பள்ளி-1

———

**ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை
கன்றிய காலனைக்காலால் கடிந்தவன் அடியவர்க்காய்ச்
சென்று தொழுமின்கள் தில்லையில் சிற்றம்பலத்து நட்டம்**
என்று வந்தாய் என்னும் எம்பெருமான் தன்திருக்குறிப்பே.

— *அப்பரடிகள்.*

சிந்திக்கும் தோறும் சிந்திக்கும்தோறும் புதுமையான இன்பம் தரும் அப்பர் பெருமானின் தேவாரப் பாடல்களில் ஒன்று இது, இதன் ஈற்றடியில் வந்துள்ள 'என்று வந்தாய்' என்ற சொற்ருெடர் ஒரு அற்புதமான செய்தியை உள்ளடக்கியது. அச்செய்தியை எளிதில் உணர்வதற்காக ஒரு கற்பனை வரலாற்றைச் சிந்திப்போம்.

ஒரு சிற்றூரில் வழிவழிப் புகழ் பெற்ற நற்குடும்பத்தில் பிறந்த ஒரு இளைஞன் தன் தந்தையிடம் ஏதோ கருத்துவேறுபாடு கொண்டு வேற்றூர் செல்கிருன். அங்கு பல இன்னல்களுக்கும் ஏமாற்றங்களுக்கும் ஆளான பின்னர், மீண்டும் தன் ஊருக்கே திரும்புகிருன். வேறு போக்கிடம் ஏது? தனது வீட்டுக்கே-தனது தந்தையிடமே-திரும்புகிருன். ஆனுலும் அவனுக்கு ஓர் அச்சம்; தயக்கம். ''தந்தையிடம் இருந்து வெளிவந்தோமே? இனி எந்த முகத்துடன் அவர் முன்பு போய் நிற்பது? அவர் நம்மை எட்டடி வரவேற்பாரோ'' என்கிற ஐயம் உள்ளத்தை அரித்துக் கொண்டே இருக்கிறது. தயங்கிக் கொண்டே வீட்டினுள் செல்கிருன், தந்தை மகனைக் காண்கிருர். உடனே என்ன காட்சியை எதிர்பார்க்கலாம்? தமிழ்ப் படக்காட்சி (சினிமா) ஆக இருக்குமானுல், தந்தை மகனை நோக்கி அட்டகாசமாக ஒரு சிரிப்பு சிரிப்பார்

"என்னடா! எங்கேயோ போனுயே; என்ன ஆயிற்று?" என்று வீரவசனம் பேசுவார். அல்லது தந்தை கையைவிரித்து நீட்டிக் கொண்டே "மகனே" என்று உரக்கக் கத்துவார். மகன் அதைவிட உரத்த குரலில் "என் தந்தையே" என்று கத்திக் கொண்டே தந்தையின் கரங்களினூடே பாய்வான். உடனே இருவரும் பாடவும் தொடங்குவர், சற்றே சிந்தித்துப்பார்ப்போம். இது தன்மை நவிற்சிதானு? இல்லவேஇல்லை இத்தகு சூழ்நிலை ஒரு நல்ல குடும்பத்தில் ஏற்பட்டு, அந்தத் தந்தையும் நாகரிகம் தெரிந்த ஒருவராக இருப்பின் என்ன நிகழும்? திரும்பி வந்த தன் மகனை எவ்விதக் கசப்பு-உணர்ச்சியுமின்றி ஏற்று கொள்ளுதல் வேண்டும்; அவனுடைய, இடைக் காலப்பிணக்கு நினைவில் இருப்பதாகவே காட்டிக் கொள்ளுதல் கூடாது, "அவனுடைய வீட்டிற்கு அவன் திரும்பியது அவனுடைய உரிமையின் பாற்பட்டது" என்று மகனுக்கு உணர்த்த வேண்டும் என்று விரும்பும் நல்ல தந்தை மிகமிக இயல்பாக "எப்படா வந்தே?" என்று தான் கேட்பார். இந்தக் கேள்வியே மகனுடைய அச்சம், தயக்கம் ஆகியவற்றை நீக்கும் மாமருந்தாக அமையும்,

மேலே சொன்ன வரலாற்றை உள்ளத்தில் கொள்வோம், புறச்சமயம் புகுந்து மீண்ட அப்பர் பெருமானை வேற்றூர் சென்று திரும்பிய மகன் எனவும், சிவபெருமானை நல்ல தந்தை ஆகவும் கொள்வோம். வேற்றுச் சமயங்களில் உழன்று உள்ளம் நொந்து திரும்பும் தன் செல்வ மகனுகிய திருநாவுக்கரசரின் உள்ளத்தில் உள்ள அயர்வும், அச்சமும் நீங்குவதற்காக, அவர் தன்னிடம் திரும்பியது அவரது உரிமை என்று அவருக்குப் புலப்படுத்துவதற்காகப் பெருமான் பயன்படுத்திய அற்புத வினுதான் "என்று வந்தாய்?" என்பது, மேலே கூறிய வரலாற்றில் வரும் 'எப்படாவந்தே" என்ற பேச்சு வழக்கு வினுவின் செம்மையான வடிவம்தான் இந்த "என்று வந்தாய்?" என்ற அருமையான வினு. இந்த வரலாற்றை உள்ளத்திற் கொண்டு இந்த திருப்பாடலைச் சிந்தித்தோமானுல் தில்லைக்கூத்தப் பெருமானின் திருவடி அப்பரடிகளுக்கு எவ்வளவு அருமையான செய்தியைத் தந்திருக்கிறது என்று எண்ணி எண்ணி வியக்கலாம்.

இவ்வாறு சிவபெருமான் அப்பருக்குத்தந்த அருமையான வரவேற்பை எண்ணி மகிழ்வதுடன் நிற்பதல்ல சைவப் பெரு மக்களின் கடமை. அவர்களும் இத்தகைய வரவேற்பை அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர். யாருக்கு? நம்மவரிற் பலர், அப்பர் பெருமானைப் போலவே, சூழ்நிலை ஒன்றே காரணமாக வேற்றுச் சமயங்களைத் தழுவியுள்ளதை நாம் அறிவோம். இத்தகைய சமய மாற்றம் கடந்த முன்னூறு ஆண்டுகளில் உச்சகட்டத்தில் இருந்ததையும் அதற்கான காரணங்களையும் அறிவோம். சமயங்களின் அடிப்படைக் கொள்கைகளை ஒப்பிட்டுச் சீர்தூக்கி, பிறசமயம் சிறந்தது எனக் கண்டு அங்கு சென்றவர் உண்டா? கல்வி வேலை வாய்ப்பு முதலிய சில பயன்களைக் கருதியும் வழிவழியாக நாம் கண்மூடித்தனமாக வளர்ந்து வந்த சில சமுதாயக் கொடுமை கள் காரணமாகவுமே பலர் புறசமயங்களுக்குச் சென்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் நெல்லை மாவட்டக் கல்லூரி ஒன்றின் முதல்வ ராக இருந்த ஒரு கிறித்தவப் பெரியார் புதிதாக கிறித்தவராக மாறிவரும் இளைஞர்களை நோக்கி "சட்டைக்காகவா பொட் டைக்காகவா" என்று சிரித்துக் கொண்டே கேட்பார். அவருடைய கேள்வியில் உள்ள சட்டைகல்வி, அதன்பயனுன வேலை வாய்ப்பு ஆகியவற்றையும் பொட்டை பெண்ணையும் குறிக்கும். எனவே சூழ்நிலை காரணமாகவே சமய மாற்றம் நிகழ்ந்தது என்பதை உணர்தல் வேண்டும். இன்றுள்ள சூழ் நிலையில் புறச்சமயத்தில் உள்ள பலர் மீண்டும் தாய்ச் சமயத் துக்கு வர விரும்புவது இயல்பு. ஆயினும் அவர்களும் தங்க ளுக்கு இங்கு எத்தகைய "வரவேற்பு" இருக்குமோ என்ற ஐயத்தால் தயக்கம் காட்டுகின்றனர். இத்தகைய அன்பர் களின் அச்சத்தையும், அயர்வையும் நீக்கி அவ்வாறு வரு வோரை இருகரம் கூப்பி வரவேற்பது சைவப் பெருமக்களின் தலையாய கடமை ஆகும். இத்துறையில் சைவ மடாலயம் ஒன்று அற்புதத் தொண்டு ஆற்றுவதை நாடே அறியும் ஆயி னும் அதுபோதாது. பிற மடாலயங்களும், சமய நிறுவனங்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

அலங்கார நாயகன் 14

திருமதி ஆர். பார்வதி அம்மாள் அவர்கள்,
தமிழாசிரியை, நாமக்கல்.

சேவற் பதாகை

இறைவன் சந்நிதானத்தில் அருணகிரியார் குழந்தையாகி விட்டார். தன்னுடையது என்பது எதுவும் இல்லாமல் தன் செயல் அற்று எல்லாவற்றையும் தாயின் கையில் ஒப்படைத்து விட்டு இன்ப துன்பம் எல்லாவற்றையும் தாயின் வழியே பெறுவது குழந்தை.

உலகிலுள்ள மற்ற குழந்தைகளுக்கும் அருணகிரி நாதக் குழந்தைக்கும் ஒரு வேறுபாடு, அந்தக் குழந்தைகள் உலகத்தை இன்னும் அறிந்துக் கொள்ளவில்லை. இந்தக் குழந்தையோ அறிந்துக் கொண்டதை மறந்து விட்டது. அருணகிரிநாதக் குழந்தை தன் மனம் என்னும் கற்பனைக் குதிரையைத் தட்டி விட்டு அதன் வேகத்தில் தன் தந்தையாகிய இறைவனை நினைத்துப் பாடுகின்றது. அப்பெருமானிடத்தில் உள்ள பொருட்களை வருணிக்கிறது,

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

களும் போட்டி போட்டுக் கொண்டு தொண்டாற்ற வேண்டிய துறை இது. அப்பர் பெருமானை நோக்கிச் சிவபிரான் ''என்று வந்தாய்'' என்று கேட்டது போல் நாமும் புறச்சமயங்களிலிருந்து திரும்பி மீண்டும் சைவத்தைச் சார விரும்பும் அன்பர்களை ''என்று வந்தீர்கள்?'' என்று உரிமையுடனும் அன்புடனும் கேட்போமானால், மேலே குறிப்பிட்ட அப்பர் தேவாரத்தின் உண்மைப் பொருளை உணர்ந்து அவர் வழி நின்றவர்கள் ஆவோம்.

அப்பர் திருவடிகள் வாழ்க!

ஒருவருடைய பெருமையை புலப்படுத்த வேண்டுமானுல் நேரே அவர் பெருமையைச் சொல்ல வேண்டும் என்பது இல்லை. அவரைச் சார்ந்தவர்களது பெருமையைச் சொல்வதும் மறைமுகமாக அவரது பெருமையைப் புலப்படுத்துவதே ஆகும். திருவிளையாடற் புராணத்திலே பாணபத்திரனது பெருமையை இறைவன் நேர்முகமாகச் சொல்லாமல் அவனுல் கழித்து விடப்பட்டவன் யான் என்று சொன்னுன், ''நானே இவ்வளவு நன்ருக வாசிக்கிறேன் என்று நீர் சொன்னீரே ஆனுல் என் குருநாதர் எப்படி வாசிப்பார் என்பதை நீரே ஊகித்துக் கொள்ளலாம் எனச் சொல்வது போலச் சொன்னுர்.

இதைப் போலவே இப்பாட்டில் தன் தந்தையின் பெருமையை அருணகிரிநாதக் குழந்தை நேரே சொல்ல வில்லை. அவனது கொடியின் பெருமையைச் சொல்வதன் வாயிலாக அவன் பெருமையைப் புலப்படுத்தினுர். பெரிய வெற்றியை உடைய மன்னர்களின் அரண்மனையிலும், கோட்டையிலும் கொடி பறக்கும். நெடுந்தூரத்தில் வருகின்ற போதே காற்றில் ஆடுகிற அவ்வெற்றிக்கொடியைப் பார்த்துவிட்டு எத்தனையோ பகைவர்கள் அஞ்சி ஓடுவார்கள்.

கடவுளரின் திருக்கோயிலிலும் கொடி பறக்கிறது. ஆடுகின்ற அக்கொடி அத்திருமாளிகையின் பெருமையையும் அதில் இருக்கிற அத்தெய்வத்தின் வெற்றிச் சிறப்பையும் விளக்குகிறது முருகனது திருக்கோயிலில் பறப்பது சேவற் கொடி அவன் திருக்கரத்தில் இருப்பதும் அதுவே, அதை நினைக்கும்பொழுது அருணகிரியாருக்குக் கற்பனை விரிகிறது, சேவலின் பெருமையை நினைக்கிருர். கோழி எவ்வளவு பெருமையுடையது. தேவர்கள் பாராட்டும் கோழி அது. தேவமகளிர் வாழ்த்தும் கோழி,

> **''கோழி ஓங்கிய வென்றுநடு விறற்கொடி**
> **வாழிய பெரிது''**

என்று சூரர மகளிர் வாழ்த்துவர், என திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் சொல்கிருர்,

இப்போது சேவற்கொடியைப் பாராட்டுகிருர் அருணகிரியார் கடவுளர்க்குப் பெரும்பாலும் எது வாகனமோ அதுவே கொடியாக இருக்கும். சிவபெருமானுக்கு வாகனம் இடபம், கொடியும் இடபந்தான். திருமாலுக்கு வாகனம் கருடன், கொடியும் கருடன். முருகனுக்கு வாகனம் மயில் கொடி கோழி. கோழிக்கொடியில் இரண்டு வகை உண்டு, முதற் கோழி நாதம் என்ற தத்துவம். உலகம் தோன்றுகின்றபோது கடைசியில் முடியும் தத்துவம் பூமி. பஞ்சபூதங்களுள்கடைசி தத்துவம் பிருதிவி இயங்காமல் இருக்கும் பரசிவத்தின் உள்ளத்தில் அருள் என்ற இயக்கம் உண்டாகிறது. இயங்காமல் இருந்தால் பொருள், இயங்கினுல் சக்தி. பொருள் சிவம் இயக்கம் சக்தி. சிவத்திலிருந்து சக்தி தோன்றியது, சக்திக் குப்பின் ஒன்றன்பின் ஒன்ருகத் தத்துவங்கள் தோன்றின. அப்படித் தோன்றியவைகளில் முதல் தத்துவம் நாதம், இந்த நாத தத்துவத்தைக் குறிக்கிறது கோழி.

பிரளய காலத்தில் உயிரினங்கள் எல்லாம் அடங்கிக் கிடக்கின்றன. பிரளயத்திற்கு பிறகு உலகம் விரியப் போகிறது என்பதற்கு முதல் அடையாளமாகத் தோன்றுவது நாத தத்துவம், இந்தத் தத்துவத்திற்கு அறிகுறியாக இருப்பது கோழி.

அடுத்த கோழி சூரபன்மனது சங்கார காலத்தில் எழுந்தது, சூரபன்மனது உடலில் முருகப்பெருமானின் வேல் பாய்வதற்கு முன் அவன் மாமரமாக நின்ருன். வேல் அவன் உடலில் பாய்ந்தபோது அவனது அகங்காரம், மமகாரம் இரண்டும் பிளக்கப்பட்டு இரு பகுதிகளாயின. ஒரு பகுதி மயிலாகவும் மற்ருெரு பகுதி சேவலாகவும் மாறின. அந்தச் சேவலைக் கொடியாகக் கொண்டான் ஆண்டவன். 'அது மேலிருந்து கூவுகிறது.

சேவலைப் பற்றி மிகப் பழங்காலத்து நூலாகிய குறுந்தொகையில் உள்ள கடவுள் வாழ்த்து சொல்கின்றது,

> **''சேவலங் கொடியோன் காப்ப**
> **ஏம வைகல் எய்தின்ருல் உலகே''**

என்ற அடிகளில் முருகன் ஏந்திய சேவற்கொடியைப் பற்றிய செய்தி வருகின்றது. கையில் கோழியைக் கொடியாகப் பிடித்தவன் பாதுகாப்பதால் உலகம் இன்பமான நாளை அடைந்தது என்பது பொருள், உலகில் எந்தக் கோழி கூவினாலும் வாழ்வு விடிவது இல்லை. ஆனால் எம்பெருமான் திருக்கரத்தில் உள்ள கோழி கூவினால் விடிந்து விடும். கோழி எப்படிக் கூவுகிறது. "கொக்கறுகோ" என்று கூவுகிறது. இக்குரலுக்குத் தமிழில் ஒரு பொருள் உண்டு, கொக்கு என்பதற்கு மாமரம் என்பது ஒரு பொருள். அறு=அறுத்த கோ, தலைவன் அல்லது கடவுள் ஆகவே கொக்கறுகோ என்பது மாமரத்தை அறுத்த தலைவன் என்று பொருள்படும். மாமரத்தைப் பிளந்த தலைவன் முருகன். கோழியின் குரல் நமக்கு மாமரத்தை அறுத்த தலைவனை நினைவூட்டுகிறது.

> "படைபட்ட வேலவன் பால்வந்த
> வாகைப் பதாகை என்னும்
> தடைபட்ட சேவல் இறகடிக்
> கொள்ள"

கொடியைச் சொல்ல வருகிறவர் முதலில் வெற்றி வேலை எண்ணி படைபட்ட வேலவன் என்றார், படையாக அமைந்த வேலையுடைய முருகன் அவனிடம் வந்தகொடி சேவல் பதாகை என்பது கொடி வாகை என்பது ஒரு மலர். அது வெற்றி அடைந்தவர்கள் சூடுகின்ற மலர். வாகைப் பதாகை வெற்றியை உடையகொடி கோழிக்கொடி முருகன் வெற்றியை உடையவன் என்பதற்கு அடையாளமாக இருப்பது மாத்திரம் அன்று பக்தர்களுக்கு எப்போதும் வெற்றியை உண்டாக்கும் இயல்பையும் உடையது. தடைபட்ட சேவல் என்பதற்கு இறைவன் கரத்தில் ஏறுவதற்கு முன்னால் அந்தச் சேவல் தடையிற்பட்டு இருந்தது, எம்பெருமான் வெற்றிக் கொடியில் வந்த பிறகு அதற்குத் தடையே இல்லை. சூரசங்காரம் ஆன பிறகு அதன் தடை நீங்கிற்று, சேவல் சிறகை அடித்துக் கொண்டு எழும்புவது பறப்பதற்காக அல்ல. கூவுவதற்கு முன் சிறகை அடிக்கும். சாதாரணமான கோழி சிறகை அடித்தாலேயே கீழே உள்ள தூசிகள் பறக்கும். எம்

பெருமான் திருக்கரத்தில் உள்ள கோழி சிறகை அடித்துக் கொள்ளும்போது உலகமே கிடு கிடுக்கிறது.

''சலதி கிழிந்து
உடைபட்டது அண்ட கடாகம்
உதிர்ந்தது உடுபடலம்
இடைபட்ட குன்றமும் மாமேரு
வெற்பும் இடிபட்டவே''

வெற்றிக் கொடியிலே நின்று சேவல் சிறகை அடித்துக் கொள்ள கடல் கிழிந்து போயிற்று. பிரபஞ்ச எல்லையாகிற சுவர் உடைபட்டது. தூள் தூளாக விழுந்தது. பிறவியைப் பெருங்கடல் என்று சொல்வது வழக்கம். முருகப் பெருமானது கையிலுள்ள கோழி சிறகை அடித்தவுடன் பிறவிப் பெருங்கடல் கிழிந்து விட்டது. பிறவித் துன்பம் இல்லையாகி விட்டது. இனிவரும் பிறவி இல்லை. இப்பொழுது வந்த பிறவி என்ன ஆயிற்று இந்தப் பிறவியில் பிரபஞ்ச சம்பந்தமே இல்லாமற் போய் விட்டது, **''உதிர்ந்தது உடுபடலம்''** உடு என்பது நட்சத்திரம். நட்சத்திரப் பரப்பு முழுவதும் உதிர்ந்தது தேவலோக வாழ்க்கையாகிய சொர்க்க இன்பங்களும் உதிர்ந்தன.

''இடைபட்ட குன்றமும் மாமேரு
வெற்பும் இடிபட்டவே''

அகங்காரமானது மமகாரத்தைச் சுற்றிலும் பெற்று மிக்க வலிமையுடையதாக தம்பமாக நிற்கிறது. மேருவைப் போல நிற்கிறது. இந்த அகங்காரம் என்ற ஒன்று நான். நான் என்ற குரலை எழுப்பி இந்த உலகத்தில் பிறவிப் பிணியில் சிக்க வைக்கிறது. நான் என்ற ஒன்றைச் சுற்றி எனது என்ற மமகாரம் விரிந்துக் கொண்டே போகிறது. நான் என்பது அகப்பற்று, எனது என்பது புறப்பற்று. நான் என்பது மனிதன், எனது என்பது மனிதனோடு சம்பந்தப்பட்ட பிணைக்கப்பட்ட மற்ற எல்லாம். நான் என்ற தம்பம் ஒன்று. எனது என்ற குன்றுகள் பல. நான் என்ற புள்ளியை மையமாகக் கொண்டு எனது என்ற வட்டம் விரிந்துக் கொண்டே போகிறது இவை எல்லாம் நாம் போக வேண்டிய மார்க்கத்தில் தடையாக உள்

என. இறைவன் திருக்கரத்திலுள்ள கோழி சிறகை அடித்துக் கொண்டவுடன் பிறவிக்கடல் கிழிகிறது. பிரபஞ்ச வாசனை அற்றும் போகிறது. தேவலோக இன்பப்பற்று உதிர்ந்து போகிறது, எனது என்ற மமகாரக் குன்றுகள் இடிந்து போகின்றன நான் என்ற அகங்கார மேருவும் இடிபடுகிறது. எம்பெருமான் திருவருளைப் பெற்று இன்பங்களைத் துய்க்க வேண்டுமானல் அதற்கு ஏற்ற மனப் பக்குவம் முதலில் நமக்கு வரவேண்டும். அந்தப் பக்குவம் சாதன அருளால் வரும், அதனை ஏற்படுத்துவதற்காக அவன் திருக்கரத்தில் சேவற்கொடி இருக்கிறது.

படைபட்ட வேலவன் பால்வந்த
வாகைப் பதாகை என்னும்
தடைபட்ட சேவல் சிறகடிக்
கொள்ளச் சலதிகிழிந்து
உடைபட்டது அண்ட கடாகம்
உதிர்ந்தது உடுபடலம்
இடைபட்ட குன்றமும் மாமேரு
வெற்பும் இடிபட்டவே''

(தொடரும்)

அன்னையின் அன்பு

திருமதி, ப. உமாதேவி அவர்கள்,
9/49 திரௌபதியம்மன் கோயில் தெரு
அரியங்குப்பம்—புதுவை-7

காலமென்னும் பெருந்தருவில் ஓர்நாள் மலர் மலர்கின்றது. மாயவனின் கையில் சுழலும் திகிரிப் படையோ என்று எண்ணி மயங்கும்படிக் கீழ்க் கடலில் செக்கச் சிவந்த ஒளிப் பூவாய் ஞாயிறு தோன்றுகின்றது. பின்னர் மெதுவாக வான வீதியில் முன்னேறிச் செல்கின்றது. பகலவனின் கிரணங்கள் பாருலகைத் தட்டி எழுப்புகின்றன. சோம்பிக் கிடக்கும் உயிர்களெல்லாம் கதிர்க் கரங்களின் மென்மையான வருடலில் புத்துயிர் பெற்று விழித்துத் தத்தம் அலுவல்களில் ஈடுபடுகின்றன.

இந்நிலையில், ஆடுங் கொடித்தேர் எழுபுரவி அருணன் நடத்தும் அகலிடத்தை எட்டுமாறு மாட மாளிகைகள் நிரம்பியதும், வளம் பல கொண்டதுமான திருச்செந்தூர்ப் பதியினை அடைகின்றான் பகலவன்.

கத்துங் கடலில் நெடும் படவில்
    கழியில் அழியில் கழுநீரில்
கானற் கரையில் கரைதிகழுங்
    கைதைப் பொதும்பில் அரும்பினங்கள்
தத்துங் கமலப் பசும் பொகுட்டில்
    சாலிக் குலையில சாலடியில்
தழைக்குங் கதலி அடிமடலில்
    தழை வைத்துழுத முதுகுரம்பைக்
குத்துங் தரங்கப் புனற்கவரில்
    குவளைத் தடத்தின் மடைவாயில்
குடக்கூன் சிறுமுட் பணிலமொரு
    கோடிகோடி யீற்று ஊங்து
முத்த சொரியும் கடலலைவாய்,

என்று பாராட்டப்பட்ட நிரலேவாயின் வழியே வரும் செங் கதிர்ச் செல்வன், எல்லாச் சிறப்புக்களும், நிரம்பியதாய், ஏனைய மாளிகைகளைவிட உயர்ந்தோங்கியதாய்க் கண்களைக் கவரும் வனப்புடனும், தூய்மையுடனும் விளங்கும் பொன் மாளிகையின் எதிரே ஒருகணம் தயங்குகின்முன்.

மாளிகையினுள்ளிருந்து, இனிமையும், மலரின்மென்மை யும், பனியின் தண்மையும் கொண்டதாய் ஒரு நங்கையின் குரல் குழைவுடன், கனிவுடன் ஒலிக்கின்றது. அந்தக் குரலேக் கேட்ட கதிரவன் பயபக்தியுடன் சாளரத்தின் வழியே எட்டிப் பார்க்கின்முன் உடல் புல்லரிக்க, இதழ்கம் இன்பப் புன்முறு வல் பூக்கத் தலேசாய்த்து வணங்கிவிட்டு அகலுகின்முன். அதனே ஒரு புலவர் காணுகின்முர். கிளர்ந்தெழும் ஆவலே அடக்கமாட்டாதவராய் அவரும் உள்ளே நோக்குகின்முர். உள்ளே அவர் காண்பது என்ன?

அழகும், புனிதமும் கொண்ட அந்தத் திருக்கோயிலின் கூடத்தினுள் ஆணிப் பொன்னுல் செய்யப்பட்டு, நவரத் தினங்களும் பதிக்கப்பட்ட அழகியதோர் ஊசலில், அனைத்து அலங்காரங்களுடன், சேடியர் புடைசூழ உலக அன்னையான பராசக்தி அமர்ந்திருக்கின்முள். "முருகுவிரி கொந்தளம் பிறங்கிய, மணிமௌலி" சுடர்விட இன்புறு முறுவலாடும், செம்பவள இதழ் திறந்து, சிறிது தூரத்தில் தனக்கெதிரே நின்றிருக்கும், பதின்மூன்று திங்களே நிரம்பப் பெற்றிருந்த குழந்தையை நோக்கி அமுதினும் இனியச் சொற்களேக் கூறிக் கொண்டிருந்தாள். உதயபானுவைப் போல் நின்றிருந்த குழந்தையோ, அவளேப் பொருட்படுத்தாமல் எல்லா அணி களேயும் கழற்றி எரிந்துவிட்டு இயற்கையெழில் பொங்க, தெய்வ மணம் கமழ, உடலில் புழுதிபடிய, பால் வடியும் வதனத்தில் விஷமம் சொட்ட. எதிரே அமர்ந்திருக்கும் அன்னையின் கருணே பொழியும் திருமுக மண்டலத்தைத் தன் வேல் விழிகளால் நோக்கிக் கொண்டிருந்தது. அம்மையோ, அன்புடன் குழந்தையைத் தன்னருகில் வரும்படி அழைக் கின்முள். "உடலில் படிந்த புழுதி நீங்க, புதுப்பனிநீர் ஆட்டி.

ஆபரணங்களைச் சூட்டி அழகுபடுத்தி, அமுதூட்ட வேண்டும் எனவே இங்கு வா'' என்று தெய்வத் தமிழில் இனிமையும் சுவையும் சேர்த்து.

தேடஅரிய மணியரை ஞாண
சேர்க்கவருக! விரற்காழி
செறிக்கவருக! திலத நுதல்
தீட்டவருக! மறுகில்விளை
யாடவருக! மடியி லெடுத்
தணைக்கவருக! புதுப்பனிநீர்
ஆட்டவருக! நெறித்தமுலை
அமுதம் பருகவருக! முத்தஞ்
சூடவருக! உடற்புழுதி
துடைக்கவருக! ஒருமாற்றஞ்
சொல்லவருக! தள்ளிநடை
தோன்றவருக! சோதிமணி
மாடநெருங்குந் திருச்செந்தூர்
வடிவேல் முருகா வருகவே!

என்று தாய்மைக் கனிவுடன் அழைக்கின்றாள். தான் பெற்றெடுத்த பிள்ளையைத் தாய் அழகுபடுத்திப் பார்ப்பது உலக இயல்பு. இறைவியாக இருந்தாலும் தேவர்கள் வணங்கும் தலைவியாக, ஒப்பற்றவளாய் இருந்தாலும் அவளும் ஒரு பெண். அதிலும் ஒரு தாய், ஞானபண்டிதனையே மகவாகப் பெற்றவள் ''காக்கைக்கே தன் குஞ்சு பொன் குஞ்சு'' என்றால், பால சூரியனாய். அறிவுச் சுடராய், சிவக்கொழுந்தாய் விளங்கும் புதல்வன்மேல்அவளுக்கு எவ்வளவு பாசமும், கனிவும், அன்பும் இருக்கும். எனவேதான் தன் ஆற்றலையெல்லாம் மறந்து, அன்பின் வடிவாக அமைந்து குழந்தையை அழைக்கின்றாள்.

ஆனால், குழந்தையோ அன்னையின் அழைப்பைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. எங்கோ பார்த்துக் கொண்டு, எதிலோ சிந்தையைச் செலுத்திக் கொண்டு நிற்கின்றது. தாயின் சொல்லைக் கேட்கவுமில்லை. அழைப்பை ஏற்று அவளிடம் செல்லவும் இல்லை. மீண்டும் அழைக்கின்றாள். ''சிறார் பசி பொறார்'' என்பது அவளுக்குத் தெரியும்.

எனவே அவள் மீண்டும், சேயிடம் ''எள்ளளவுபசிவந்தாலும் நீ பொறுக்கமாட்டாது அழுது, அல்லல் படுத்துவாய். எனவே ஒழுங்காக வந்து பாலமுதம் உண்டு செல்'' என்று பசியின் கொடுமையையும், அது வந்தால் அவன்படும் துன்பத்தையும் கூறுகின்ருள்.

எள்ளத்தனை வந்துறு பசிக்கும்
இரங்கிப் பரந்து சிறுபண்டி
எக்கிக் குழைந்து மணித்துவர்வாய்
இதழைக் குவித்து விரித்தழுது
துள்ளித் துடித்துப் புடைபெயர்ந்து
தொட்டில் உதைத்துப் பெருவிரலைச்
சுவைத்துக் கடைவாய் நீரொழுகத்
தோளின் மகரக் குழைதவழ
மெள்ளத் தவழ்ந்து குறுமூரல்
விளைத்து மடியின் மீதிருந்து
விம்மிப் பொருமி முகம்பார்த்து''

அழுவாய் என்றுகூறி பயமுறுத்தியும் அசையாது, அலட்சிய மாகப் புன்முறுவல் பூத்து நிற்கின்ருன். ''பனங்காட்டு நரி சல சலப்புக்கு அஞ்சாது என்று கூறுவது போல் உள்ளது அவன் நிற்கும் நிலையும், கண்களில் ஒளிரும் குறும்பும் அதைக்கண்ட தேவிக்கு அன்பின் அடிப்படையில் சிறிதளவு சினமும் எழுகின்றது. ''செந்தூர வண்ணத்தினள்'' என்று பட்டரால் போற்றப்பட்ட அவள் உடலில் கோபத்தால் எழுந்த குங்கும வண்ணம் கோலமிடுகின்றது. குழந்தையை எப்படி வயப்படுத்துவது என்ற சிந்தனையில் ஆழ்கிருள் அலகிலா விளையாட்டயரும் அன்னை உமையம்மை.

இறுதியாக, ஒரு முடிவுக்கு வந்தவளாய், தன் செல்வப் புதல்வனிடம் கூறுகின்ருள். என்னுரை கேட்டு நீ வரா விடில் உன்னை நீராட்டமாட்டேன். ஆபரணங்களால் அலங்கரியேன். உன் இந்துமுக மண்டலத்திற்கேற்றவாறு அழகிய பிறைநுதலில் திலகமிடேன். கவின்மிக்க கண்களுக்கு மையெழுதேன். உன் தளிர்க் கால்களின் உள்ள சிலம் பினைத் திருத்தியமைக்கமாட்டேன் என்றெல்லாம் கூறிவரு பவள், இறுதியில் கடைசிப் பாணமாக, உன்முகத்தையே

நோக்கமாட்டேன். ஒரு உரையும் கூறமாட்டேன்'' என்று கூறி முடிக்கின்றாள். அவள் எதிர்பார்த்த பலனை உடனே அவை தருகின்றன. பாசாங்குசமும் கையில் அணையும் திரிபுர சுந்தரியின் கரமலர்களிடம் கட்டுப்பட்டு அவள் அரவணைப்பில் குழந்தை புன்னகை செய்கின்றது. சேயினைத் தழுவி நிற்கும் அகிலாண்டநாயகியோ பெருமிதமும், கனிவும் கலந்த அருள் புன்னகை பூத்து நிற்கின்றாள் அப்புன்னகை. அனைத்துயிரையும் காத்து இன்பூட்டும் மென்முறுவலாக உலகெங்கினும் பரந்து நிற்கின்றது.

உள்ளே நிகழ்ந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் கண்டு மகிழ்ந்த புலவர் ''தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம்'' என்ற கருத்துடன் அழகியதோர் சொல்லோவியமாக அமைத்துக் கொடுத்துள்ளார். குழந்தையின் மனத்தை தேவி, எவ்வாறு தன் வழிக்குத் திருப்பினுள் என்பதை அவளுடைய கூற்றாகவே பின்வருமாறு புகல்கிறார்.

இறுகும் அரைஞான்இனிப் பூட்டேன்
இலங்கு மகர குண்டலத்தை
எடுத்துக் குழையின் மீதணியேன்
இனியுன முகத்துக் கேற்கஒரு
சிறுகுந் திலதந் தனைத் தீட்டேன்
திருக்கண் மலர்க்கு மையெழுதேன்
செம்பொற் கமலச் சீறடிக்குச்
சிலம்பு திருத்தேன் நெறித்துவிம்மி
முறுகு முலைப்பால் இனிதூட்டேன்
முகம் பார்த்திருந்து மொழிபகரேன்
முருகா வருக! சிவசமய
முதல்வா வருக! திரைகொழித்து
மறுகு மலைவாய்க் கரைசேர்ந்த
மழலைச் சிறுவா வருகவே!

என்பதுதான் தேவியின் கூற்றாக அவர் அமைத்துத் தந்த சொல்லோவியம். அன்பும், அருளும் கொண்ட சிவசங்கரியின் பெருமையையும், முருகப் பெருமானின் புகழையும் மேற் குறிப்பிட்டவற்றால் தெளிவாக நாம் அறிந்து கொள்வதோடு, அவளுடைய அன்பு எத்தன்மையது என்பதையும் நுட்பமாக உணர்ந்து கொள்ளவும் முடிகின்றது.

ஸ்ரீ ஆதிசங்கரரின்

ஸ்ரீ சுப்ரமண்ய புஜங்கம்

திரு, வித்யாதீர்த்ததாஸன் அவர்கள்;
புதுக்கோட்டை (கிழக்கு)

(தமிழாக்கம், கோவை கவியரசு ஸ்ரீ நடேசக்கவுண்டர் அவர்கள்)

5. அழகின் பிழம்பு

இறைவனுடைய திருவடிகளைத் தாமரையாக உவமிப்பர் பெரியோர். திருவடி வர்ணனையுடன் ஆரம்பமாகிறது பாதாதிகேசம். தாமரையில் அன்னம் வாழும். தேனிருக்கும் ஆதலால் வண்டும் வந்து தங்கும். முருகா! உன்திருவடியும் தாமரையாதலால் ஹம்ஸம் என்ற மந்திரமே அன்னமாக உள்ளது. பக்தர்கள் வண்டாகவே மொய்க்கின்றோம். உன் திருவடியில் இன்பமான தேன் உள்ளது. கோடையின் வெப்பத்தைத் தணிவிக்கும் தாமரை. உன் திருவடியோ அடியார்களின் மனக்கவலை துன்பங்களாகிய வெப்பத்தை நீக்கும். எனவே என் நெஞ்சும் உனது திருவடியை நாடுகின்றது என்கின்றார் ஸ்ரீ ஆதிசங்கரர். ‘பெற்றதாய்கூடக் குழந்தை அழுதால் பொறுப்பாள். உன்திருவடி நான் துன்பப்பட்டால் பொறுது’’ என்கின்றார் ஸ்ரீ ராமலிங்கர்.

பெற்றிடுதாய்போன்றது நின்பெற்றி என்பேன்: பிள்ளையது
மற்றழுதால் கேட்டும் வராது அங்கே சற்றிருக்கப்
பெற்றாள் பொறுப்பள்: பிரான் நீ பொறுக்கினும் நின்
பொற்றாள் பொறு என்புலம்பு

அன்னையினும் தயவுடைய ஆண்டவன் முருகப் பெருமானின் திருவடியை ஸ்ரீ ஆசார்யாள்

அஞ்சம் பொலிந்தே சிவந்தேர் நிறைந்தே
அமுதம் பொழிந்தே பிறப்பென்ற கோடை
வஞ்சம்தவிர்ந்தே விளங்கும் பதத்தா
மரை மேவுமளிநெஞ்சம் அலைவாயின் முருகே 9

என்றுபாடி வணங்குகின்றார்.

முருகனது அழகை நினைந்து உருகிப் பாடாதவர் உலகில் உண்டோ? அலங்காரத்தில் அருணகிரிநாதர்

திருவடியுந்தண்டையும்: சிலம்பும் சிலம்பூடுருவப்
பொருவடிவேலும் கடம்பும் கடம்புயம் ஆறிரண்டும்
மருவடிவானவதனங்களாறும் மலர்க்கண்களும்
குருவடிவாய்வந்தென்னும் குளிரக் குதிகொண்டவே

என்று முருகனுடைய முழுத்திருவுருவையும் வாய் குளிர மகிழ்ந்து பாடுகின்றார். இராமலிங்க சுவாமிகள் கண்ணடி முருகப் பெருமானுடைய உருவத்தைக் கண்டு

சீர்கொண்டதெய்வவதனங்களாறும் திகழ்கடப்பந்
தார்கொண்ட பன்னிருதோள்களும் தாமரைத்தாள்களுமோர்
கூர்கொண்டவேலும் மயிலும் நற்கோழிக்கொடியும் அருட்
கார்கொண்ட வண்மைத்தணிகாசலமு மென்கண்ணுற்றதே

எனப் பாடி மகிழ்ந்தாரன்றோ?

இதே முறையில் முருகப் பெருமானைத் திருச்செந்தூரில் தரிசிக்கிறார் ஸ்ரீ ஆதிசங்கரர். இடையில் தங்க நிறமான பீதாம்பரம் அணிந்திருக்கிறான் பெருமான். அதில் கச்சையும் ஒட்டியாணமும் அணிந்துள்ளான். கச்சையிலுள்ள மணிகள் கலகல வென்று ஓசையிடுகின்றன. "அப்படிப்பட்ட அழகான இடையை என்மனம் நாடி வணங்குகின்றது" என்கிறார் ஜகத்குரு

இலங்கும்பொன் உடைமீது கணகண்கனென்றே
இசைகிண்கிணீகச் சையொடுபட்டையம்பொன்
எலகில்விலதுவீ சுசெந்தூரிலம்மான்
அரைநீடுமழ கென்றன் அகமேவியுறுமே 10

இறைவனது மார்பில் ஒரு விதமான செந்நிறம் காண்கின்றார் ஜகத்குரு. வள்ளியம்மையின் மார்பில் அணிந்த குங்குமம் நின் மார்பில் பட்டுச் சிவந்ததோ? என்கின்றார். சிவபெருமானிடம் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இறைவனே! உனக்கு உடம்பில் மூன்று இடங்களில் தழும்புகள் உள்ளன. அம்மை அணைந்ததால் அவரது மார்புகள் உன்மார்பில் தழும்பு, பாண்டியன் பிரம்பால்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

திருமுருகாற்றுப்படை

உரை விளக்கம்

' செந்தமிழ்ச் செல்வன் '
புலவர்: திரு. சிக்கல், சி. சானகிராமன் அவர்கள்,
சிக்கல் (அஞ்சல்) நாகை [வட்டம்]

திருச்செந்தூர்

முருகனை ஆறுமுகமும் பன்னிரு புயமும் கொண்ட அர்ச்சா மூர்த்தியாய் இனி காட்டுகிறார் நக்கீரர். ஆறுமுகங்களின் தத்துவம் சொல்கின்றார். ஆகமங்களில் கூறிய முறைப்படி சித்தரிக்கப்பட்டிருக்கின்றது அவனே ஐந்தொழிலும் இயற்றுவன் என்று கூறுகின்றார். இது உருவ வழிபாடு. ஆகவே புராண புருஷனாகவும், ஆகமப் பொருளாயும் இருக்கும் முருகன் நமக்கு யானை வாகனத்தில் காட்சியளிக்கின்றார். எப்படி எனில்,

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

அடித்ததால் முதுகில் தழும்பும், பாசுபதம் வாங்கியபோது அருச்சுனன் வில் கொண்டு தலையில் அடித்ததால் ஏற்பட்ட தழும்பும் உண்டு.

தழுவுமையால் முன்னும் தமிழிறையால் பின்னும்
தொழுமிறையால் மேலும் சுவடு கெழுமுவ:

என்பர் வாட்போக்கிக் கலம்பகம் என்ற நூலிலே.

அன்பைச் செந்நிறமாகக் கூறுவது மரபு. அல்லது உன் அன்பர் மீது உனக்குள்ள அன்பின் காரணமாக உன் மார்பு சிவந்துள்ளதோ? அப்படிப்பட்ட கருணையாளனை உனது மார்பைத் தொழுவேன் என்கிறார்.

குறமாதி னிருதுங்க தனகுங்கு மந்தாள்
கொடுசேந்த தோஅன்பர் குலமீது கொண்ட
திறமான அனுராகம் வெளிநின்ற தோ நின்
திருமார்பில்ஒளி செந்திலா யஃது தொழுவேன் 11

செந்திலாண்டவன் துணை

ஸ்ரீ ஜகத்குரு ஆசார்ய சுவாமிகள் திருவடிகளே சரணம்

78–90 வைந்நுதி பொருத வடுஆழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டும் மருங்கின் கடுநடைக்
கூற்றத்து அன்ன மாற்றரும் மொய்ம்பின்
கால்கிளர்ந்து அன்ன வேழம் மேல்கொண்டு
ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பின் சென்னிப் பொற்ப
நகைதாழ்வு துயல்வருஉம் வகைஅமை பொலங்குழை
சேண்விளங்கு இயற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாவில் கொள்கைத் தம்தொழில் முடிமார்
மனன்நேர்பு எழுதரு வாள்நிற முகனே.

விளக்க உரை:-

அங்குசத்தின் கூரியநுனி பதிவதால் வடுவிளங்கும் அழகிய நெற்றியை உடைய யானை. யானையின் முகத்திலே நெற்றிப்பட்டம் விளங்குகின்றது. பட்டத்திலே கட்டப் பட்டுள்ள பொன்னரி மாலைகள் அசைகின்றன. யானையின் மணியோசை மாறி மாறிக் கேட்கிறது. யானை யமனைப் போல் வலிகை கொண்டு காற்று எழுதல்போல விரைந்து செல்லும் ஆற்றலுடையது. இத்தகைய யானையின் மீது ஏறி முருகப் பெருமான் விரைந்து வருகின்ருன். திருப்பரங் குன்றப் பதிகத்தில் ''ஞாயிறுகடற் கண்டாங்கு'' என்று பச்சை மயில் வாகனத்தை கூறியவர் இங்கு யானை வாகன மென்கிருர். யானையும் பிரணவ வடிவம் என்ற கருதத் தக்கது. ஆயினும் மயிலில் ஆரோகணிப்பதற்கும், யானையில் ஆரோகணிப்பதற்கும் தத்துவார்த்தத்தில் வேறுபாடு உண்டு. மயிலில் ஆரோகணிக்குங்கால் மயிலின் தோகைகளுக்குள் அடங்கி நடுவிலிருக்கும். அதாவது பிரணவத்தின் மத்தியிலி ருக்கும். யானை மீது ஆரோகணிப்பதில் பிரணவத்தின் உச்சி யிலிருக்கும். மேலிருந்து அதை நடத்தும். ஆகவே பிரண வத்தின் உட்பொருளும் அவன் அதைத் தன் வாகனமாகக் கொண்டு நடத்துபவனும் அவனே. மேலும் இறைவனின் ஐந்தொழில் நடத்தும் வன்மையும் சொல்வதால் ஸ்ருஷ் டிக்கே தாதுவான முளை எழுத்தாகிய பிரணவத்தின் அதிஷ்

டானனுக உருவகப்படுத்த யானைமீது வந்தார் என்ருர். மேலும் முருகன் பவனி வருவது போலும் துலைவிலிருந்து நக்கீரர் நமக்குக் காட்டி முதலில் பொன்னரி மாலையும் முக படாமும் பிரகாசமாய்த் தெரிவதைக் கூறி பின்பு மணியோ சையைக் கேட்கும்படி செய்கின்ருர். இப்படியே பின்னுல் அப்பனின் கிரீடங்களும், அப்புறம் காதணிகளும் பின்பு முகங்களும் வரிசையாய்ப் பவனி நம்மை நெருங்க, நெருங்க நமக்குப் புலப்படும் காட்சியின் விவரங்களை ஒவ்வொன்ருய்ச் சொல்கின்ருர். முதலில் பிரகாசமான முகபடாம் தெரிந்து அப்பால் மணியோசை கேட்பது ஒளி முந்தியும் ஓசை பிந்தி யும் வரும் தத்துவத்தைக் கூறினுர். ஸப்தம் என்பது ஓசை. ஸ்பந்தனம் என்பது அசைவு. ஒன்றில்லாமல் மற்ருென்று இருக்க முடியாது. அசைவு உண்டாகும் போது ஓசை எழும். பரமசிவம் பராசக்தியோடு சேர்ந்த காலத்தில் உண்டான ஸ்பந்தனமும் ஸப்தமுமே பிரணவம். அதுவே முதல் அசைவும் நாதமும் அதை எவ்வளவு அழகாக சித்தரித் துள்ளார் நக்கீரர். யானை முகபடாம் சொல்லிய பின் மணி யோசையைக் காட்டுகிருர். மணியோசை பிரணவ ஓசை யின் சாயை தானே. இவ்வாறு பிந்துநாத தத்வம் சொல்லிப் பாட்டை ஆரம்பிக்கின்ருர். பவனி நெருங்கி வருகின்றது. முகபடாத்தின் பிரகாசத்துக்கு மேல் இன்னெரு ஒளி வீசு கின்றது. ஐந்தாகிய வேறுபட்ட உறுப்புக்களும் அமைய நல்ல வேலைப்பாடுகளுடன், அழகு நிரம்பப் பெற்று முருகன் அணிந்துள்ள முடி காணப்படுகின்றது. நிறத்தால் மாறு பட்ட மணிகள் கிரீடத்திலே பதிக்கப் பெற்று ஒளி வீசுகின் றன. மணிகள் பதித்த பொன்முடி மின்னலைப் போல ஒளிர முருகனின் சென்னி பொலிவுடன் விளங்குகின்றது.

முறைப்படி அமைந்துள்ள ஒளியோடு தாழ்ந்து அசை யும் பொன்னுலாகிய மகரக் குழைகள், வானத்தில் விளங்கும் ஒளியினையுடைய முழுமதியினைச் சுற்றி அகலாதுள்ள நட்சத் திரங்களைப் போலப் பொலிவுடன் மிளர்கின்றன. முருகனின் முகம் மதியம்போலவும், அவன் காதுகளில் அணிந்துள்ள

குழைகள் மதியினைச் சூழ்ந்துள்ள விண்மீன்களைப் போலவும் காணப்படுகின்றன.

உலகியல் இன்பம் பெறுவோர்க்கு இயல்பாகியது இல்லறமே. துறவறமோ, இல்லறத்தார் நோக்கில் மிகுந்த துன்பமுடையது. அத்தகைய துறவறத்தைத் துன்பம், என்று கருதாது. அவ்வறத்தினைக் கடைபிடித்து அதனின்றும் சிறிதும் வழுவாது கடமையைச் செய்து ஒழுகும் ஒப்பற்ற ''நீத்தார்'' தம் உள்ளத்திலே பொருந்த ஒளிமிகும் முருகப் பெருமானின் திருமுகங்கள் நிலைபெற்றுள்ளன. திருப்பரங் கிரி முருகனுக்குச் சென்னியில் செங்காந்தள் பூமாலை கொடுத் தவர், சீரலைவாய் முருகனுக்கு இரத்தினகிரீடம் தந்தார். அங்கு இயற்கை அழகு. இங்கு செயற்கை அழகு. முருகனின் முகத்தைச் சந்திரனாகவும், காதணிகளை நட்சத்திரங்களாகவும் உவமை சொன்னார். திருப்பரங்கிரி முருகனை ஞாயிறு என்று சொன்னார். சீரலைவாய் முருகனை சந்திரன் என்றார். அஞ் ஞான இருளை விலக்குவதில் சூரியனும் தண்ணனி சுரப்பதில் சந்திரனும் உவமையாயிற்று. பின் ஆறுமுகத் தத்துவம் விளக்கப்படுகின்றது.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு துறை களில் இருப்பவர்களும் காண்பது ஆறுமுகமே. யோக பஞ் சகங்களான பக்தியோகம், கருமயோகம், ராஜயோகம், ஞானயோகம், சாங்கியயோகம் என்று கூறப்பட்டவைகளின் முடிவும் இவ்வாறு முகங்களே. புலவன், பௌராணிகன், பக்தன், யோகி, ஞானி, விஞ்ஞானி என்று பல திறப்பட்ட தாவில் கொள்கையாளரும் முடிவில் பார்ப்பதும் அனுபவிப் பதும் இவ்வாறு முகங்களே என்று கூறியிருக்கின்றார் நல்லி சைப் புலவராம் நக்கீரர்.

91–104 **மாஇருன் ஞாலம் மறுஇன்றி விளங்கப்**
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்; ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்துஇனிது ஒழுகிக்
காதலின் உவந்துவரம் கொடுத்தன்றே; ஒருமுகம்
மந்திரவிதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்விஓர்க் கும்மே; ஒருமுகம்

எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள்போலத் திசைவிளக் கும்மே; ஒருமுகம்
செருநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட்டன்றே; ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகை அமர்ந்தன்றே; ஆங்குஅம்
மூஇரு முகனும் முறைநவின்று ஒழுகலின்

உரை விளக்கம்:-

பெரிய இருள் சூழ்ந்துள்ளது இவ்வுலகம். உலகத்தின் புறஇருளையும் போக்கி உலகமே குற்றமின்றி ஒளிபெற்று விளங்குமாறு, பல ஒளிக் கதிர்களை கற்றைகளை ஒரு சேர விசிப் பரப்பி நிற்கின்றது ஒருமுகம். மகாசக்தியுள்ள இறைவனின் பஞ்சக்ருத்யங்களில் சிருஷ்டியைச் சொல்கிறார். மஹா பிரளயத்தில் சகலமும் ஒடுங்கி இருள் சூழ்ந்து இருக்கும் நிலையில் மறுபடியும் சிருஷ்டி தொடங்கப் பல கிரணங்களைத் தோற்றுவித்தது. சிருஷ்டி பல தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டமையாயின் அவற்றிற்கேற்ப பல கிரணங்களை தோற்றுவித்தது என்றார். கிரணங்கள் என்பது (Vibrations) என்று விஞ்ஞானம் சொல்லும் சூக்ஷ்ம ஸ்பந்தனங்கள், இவற்றால் பரமசிவத்தினுடைய பராசக்தியருளினாலே குடிலையிலே நாதந்தோன்றி நாதத்திலே விந்து தோன்றி, விந்துவில் சாதாக்யமும், சாதாக்யத்தில் மகேஸ்வரமும், மகேஸ்வரத்தில் சுத்த வித்தையும் இவ்வாறாக ஒவ்வொரு தத்வமும் தோன்ற அதற்கான சூட்சும சலனங்கள் ஏற்படுவதைப் 'பல்கதிர்' என்று கூறுகின்றார்.

அன்புடையார் துதிக்கின்றனர். துதிகேட்டு முருகன் ஆங்கு விரும்பிப் பொருந்துகின்றான். இனிமையோடு சென்று துதிப் போரிடத்துக் கருணை கூர்ந்து மகிழ்ந்து அவர்க்கு வரம் கொடுத்தவாறு உள்ளது ஒருமுகம். இது அப்பனின் அனுக்ரக சக்தியைக் குறித்தது. இங்கு ஆர்வலர் செய்வதை "ஏத்தி" என்ற ஒரே சொல்லாக சொல்லி, அப்பன் செய்வதை பல அடைமொழிகளோடு கூறுவது நோக்கத்தக்கது.

வேதங்களிலே சொல்லப்பட்டுள்ள மந்திர முறைகளுக்கு ஏற்ப சிறிதும் குற்றமின்றி அந்தணர்கள் வேள்விகளை இயற்று கின்றனர். இத்தகு வேள்விகள் இடையூறின்றி நிறைவேறு தற்கென்று முருகன் திருவுள்ளத்தே அருள் நினைவு கொள் கின்றான். அவனின் இவ்வருள் புலப்பட விளங்குவது ஒரு முகம்.

கற்றலாலும், கேட்டலாலும் அறிய முடியாதவாறு பல நுண் பொருள்கள் உள்ளன. எஞ்சியனவாகிய இவற்றை அறிதலே மெய்ஞ்ஞானமாம். இவற்றை உணர்ந்து கொள் ளவே பெரியோர் விரும்பி முனைந்து நிற்பர். முருகப்பெரு மான் ஞானாசிரியனாக வந்து எஞ்சிய பொருள்களை அன்பர்க்கு அறிவுறுத்துவான். ஆதலின் பரஞானப் பொருளைப் பாது காவலுண்டாகும்படி தேடி நிற்போர்க்கு மதியம் போல் குளிர்ந்த அருள்ஒளி வீசித் திசையெல்லாம் விளங்குமாறு திகழ்வது ஒருமுகம்.

உலகத்து உயிர்கள் வினை வயப்பட்டன. கடவுள் வகுத்த நீதியை மறந்து, தீவினையை மேற்கொண்டு கொடுந் தொழில் புரியும் அரக்கரானோர் பலர். அவர்களைத் தனது மறக்கருணையால் வென்றும், கொன்றும் உய்கதி பெறும்படி முருகன் செய்கிறான். யாவரிடத்தும் ஒப்ப அன்பு பாராட் டத்தக்க, வேண்டுதல் வேண்டாமை இலாப்பரம் பொரு ளாகிய முருகன், செலுத்தத்தக்க நடுவு நிலைமையினின்றும் நீங்கிப் பகைவர்களை அழிக்கிறான். கறுவுதல் கொண்டசினம் மிக்க உள்ளத்தொடு போர்க்கள வேள்வியை விரும்பிச் செய்து பொலிவுறுவது ஒரு முகம்.

பேரின்ப வெள்ளமாகிய முருகன் விளங்குகின்றான். குறவர் குலத்துதித்த மடப்பம் பொருந்திய, கொடி போலும் இடையினையுடைய மென்மைத் தன்மைமிக்க வள்ளியோடு நகையாடி இன்பம் கொண்டு விளங்குவது ஒரு முகம். வள்ளியம்மை ஆண்டவனின் இச்சாசக்தியாகும். சங்கற்ப மாத்திரத்தில் ஐந்தொழிலும் நடக்குமாதலால் இங்கு இச்சா

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

இழுக்கும் பழனியப்பன்

புலவர், திரு; தி. மு. சங்கரலிங்கம் அவர்கள்,
தமிழாசிரியர், கௌமாரமடாலயம்
திருவாமாத்தூர்

———

உயர்ந்த பிறவி மக்கட் பிறவி, அப்பிறப்பினை எடுத்தவர்கள் புன்னெறியதனிற் செல்லும் போது அப்போக்கினை விலக்கி, நன்னெறியொழுகச் செய்து, நவையறு காட்சி நல்க எந்தை கந்தவேள் எழுந்தருளியுள்ள தலங்கள் பலவாயிருப்பினும் சான்றோர்களால் சிறப்பித்துக் கூறப் பெறும் தலங்கள் ஆறுகும். அவையே ஆறுபடை வீடுகள் எனப் பெறும். இந்த ஆறு தலங்களுள் பொல்லா மாயையுள் அகப்பட்டுச் சுழன்று, அல்லலை ஏற்றுப் பாசக்கடற்குள் வீழாமலும். சிக்குண் டுழலாமலும், தவறி விழுந்து வருந்துபவர்களை ஈடேற்றவும் பன்னிருதடந்தோள் வள்ளல் அலைவாய் என்ற திருச்செந்தூர் கடற்கரையில் திருக்கோயில் கொண்டான் போலும்.

ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலச் சேற்றிலும் ஆசாபாசக் கடலிலும் நைந்துழல்வோரைக் கரையேற்றிய

(முன்பக்கத் தொடர்ச்சி)

சக்தி கூறப்பட்டது. திருப்பரங்கிரிப் பாடலில் க்ரியாசக்தியான தெய்வானையம்மை கூறப்பட்டது.

இங்ஙனமாக முருகப்பெருமானின் ஆறு திருமுகங்களும் முறைப்படி தத்தமக்குரிய தொழில் புரிந்து வருகின்றன. ஆறுமுகங்களின் தொழிலை அருணகிரியாரும் ''ஏறுமயில் ஏறி விளையாடுமுக மொன்றே'' என்ற திருப்புகழிலும், குமர குருபரர் தமது கந்தர் கலிவெண்பாவில் 42வது வரி முதல் 47வது வரி முடியக் கூறியுள்ளார்.

அப்பெருமான். தன் பொன்னர் திருவடியே புகல் எனத் துதிப்போரை நலம் பெற்று வாழ்ந்துய்ய உயர் வாழ்வில் வாழவைப்பேன் என்பதற்கடையாளமாகக் குன்றின் மீதிட்ட விளக்கெனக் குறிஞ்சித் தலைவனை குமரவேள் மலையுச்சி யிலும் திருக்கோயில் கொண்டான் போலும்.

அறுமுகச் செவ்வேள் அறுபடை வீட்டுள் மூன்ருவது படை வீடாகத் திகழ்வது திருஆவினன்குடி என்ற தலமாகும். இதனைப் பழனியெனப் பகர்வதுமுண்டு, சிலர் பழனியென்பது மலைப்பகுதியினதென்றும், திருவாவினன்குடி என்பது அடி வாரத்திலுள்ள கோவில் என்றும் கூறுவர். இரண்டு பிரிவிலும் சான்ருேர் பாடல்கள் உள. கடைச் சங்ககால நூலாகிய திருமுருகாற்றுப் படையில் நக்கீர தேவர்.

ஆவினன்குடி அசைதலும் உரியன்.........

என்று கூறுகிருர் என்பது நினைவு கூர்வதற்குரியது. ''**அதிசயம் அநேக முற்ற பழனி மலை**'' என்று அருணகிரிநாதர் புகழ்ந்து பாடும் பழனியில் அறுமுக வேலன் ஞானபண்டித னுய் கருணைமூர்த்தியாய்க் காட்சி தருவதைக் கண்டு தொழக் கருதி நாங்கள் பழனிக்குப் புறப்பட்டுச் சென்ருேம்.

சரவணப் பொய்கையில் நீராடி-நீருடிப் பின் மலை வழி பாட்டை மேற்கொண்டோம், மலை உச்சியில் ஞான தண்டா யுதபாணியைக் கண்டதும் கண்கள் பெற்ற பயனிதுவே என்று களித்தோம். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி,

நாலாயிரம்கண் படைத்திலனே அந்தநான் முகனே

என்று பாடிப் பரவினர்.

அடிமுடியும் நடுவுமிலா அகண்டபரம்
பொருளுளதென் றறிந்திட் டாலும்
கடிகமழ்மென் மலர்ப்பூசைக்(கு) அருள்செயும் பண்(பு)
அதற்கிலையாற் கருத மாட்டேன்
பொடியதனுல் முழுக்காடிக் கீளொடுவெண்
கோவணமும் புனைந்து கையில்
தடிபிடித்துப் பழனிவெற்பில் குலவுமவன்
தனைமறவேன் சரதம் மாதோ.

— *தண்டபாணி சுவாமிகள்.*

என்ற பாடலை நெஞ்சு நெக்குருகப் பாடி உளம் கசிந்தேன்.

வழிபாட்டை முடித்துத் திரும்புகையில் இழுவைவண்டி மூலம் கீழே இறங்கலாம் எனக் கருதினேம். இழுவை வண்டி நிலையம் செல்லும் பாதையில் உள்ள சிற்றுண்டி விடுதியில் சிற்றுண்டி உண்ணக் கருதிப்படி வழியே இறங்கினேம். தென்புறச் சுவரில் எழுதியிருந்த பாடலொன்று எங்கள் உள்ளத்தைத் தொட்டது.

உன்னைத் தவிரமற்ருென் றுண்டென்று முன்னுமவர்
என்னைத் தொடராவாழ் வென்றருள்வாய்-முன்னை
ஒழுக்கம் கருணை, தவம் உள்ளவரை யெல்லாம்
இழுக்கும் பழனி யப்பனே.

என்பதுதான் அப்பாடல். பாட்டைப் படித்த நண்பர் ஒழுக்கம், கருணை, தவம் உள்ளவர்களையெல்லாம் தன் பக்கம் வருமாறு இழுத்து அருள்புரிபவன் பழனியப்பன் என்று பொருள் கூறினர். அதைக் கேட்ட மற்றொருவர் கூறிய விந்தையான பொருள் என்னை வியப்பில் ஆழ்த்தியது. அவர் சொன்னதாவது:-

ஒழுக்கம், கருணை, தவம் முதலிய ஒவ்வொரு மனிதருக்கும் இருக்க வேண்டிய பண்புகளாகும். வாழ்க்கையில் சில சமயம் இவைகளில் ஒன்றையோ, அனைத்தையுமோ தவறவிட வேண்டிய சூழ்நிலையும் ஏற்படக் கூடும். அவ்வாறு ஏற்படும் போது தவற விடாமல் மனத்திண்மையுடன் வாழ முற்பட வேண்டும். அவ்வாறின்றி தவற விடுபவர்களைத் தன் பக்கம் இழுக்கமாட்டான். ஒழுக்கம், கருணை, தவம் முதலியவற்றை விடாமல் பெற்றிருக்கும் வரைத் தன்பக்கம் இழுத்தருள்பவன் எங்கள் பழனியப்பன்'' என்றுர்.

இத்தகைய அரிய பொருள் கொள்ளும் வகையில் பல்லாண்டுகட்கு முன் இப்பாடலைச் சுவரில் எழுதியதுதெரிந்தது ஆனுல் இப்பாடல் இருக்கும் பகுதியில்தான் இழுவை வண்டி நிலையம் அமைந்திருப்பது வியப்பைத் தந்தது. அருள்நிறை புலவர் கூறிய வாக்கும், அப்பாடலைப் பல்லாண்டுகட்கு முன் சுவரில்எழுதிய திறனும் பாராட்டும் பண்பைப் பெற்றதன்றே இழுவை வண்டிப் பாதையை அமைக்க ஆய்வாளர் மலை

அமைப்புக்கேற்றவாறு இவ்விடத்தைத் தெரிந்தெடுத்தது விந்தையிலும் விந்தையன்றோ?

இன்றும் அப்பாடல் அவ்விடத்தேயுள்ளதைக் காணலாம். படிமீதேறி வர இயலாதவர்கள், வசதி படைத்தவர்கள் ஆகிய அன்பர்களை ஒழுக்கம், கருணை, தவம் உடையவர்களாகவே கருதி இழுவை வண்டி மூலம் தன்பக்கம் இழுத்து வந்து அருள்புரியும் பாங்கினைப் பழனியப்பன் பெற்றுள்ளதின் சிறப்புதான் என்னே!

இத்தகைய அருட் சிறப்புடைய-எதிர்காலத்தில் நடக்க இருந்ததை முன்னதாகவே(பலஆண்டுகட்கு முன்)உணர்ந்து தான் பாடியிருப்பாரோ என்றெண்ணும் கருத்தமைந்த பாடலை அருளியவர் யார் என்று தெரிய எங்கள் மனம் விழைந்தது. எங்கள் குழுவுள் இருந்த ஒரு நண்பர் கூறினர். இப்பாடியவர் **வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள்** என்றும், அவர்கள் பாடிய நூல்கள் பலவென்றும், அவைகளுள் **பழனித் திருவாயிரம்** என்பது ஒன்று என்றும் கூறினர். மேலும், ஆயிரம் பாடல்களை உடைய அந்நூலுள் வெண்பா மாலை என்ற பகுதியில் 82-ஆவது பாடலாக உள்ளது. இப்பாடல் என்றும் கூறியபோது நாங்கள் பெற்ற மகிழ்வுக்கு எல்லையேயில்லை. இவ்வியத்தகு பாடலை நாங்கள் நாட்குறிப்பில் எழுதிக் கொண்டு இறையருளை எண்ணிப் புறப்பட்டோம்.

ஏன்? நீங்களும் மீண்டும் ஒருமுறை அப்பாடலைப் படித்துப் பார்க்க வேண்டாமா.

உன்னைத் தவிரமற்றென் றுண்டென் முன்னுமவர்
என்னைத் தொடராவாழ்(வு) என்றருள்வாய்-முன்னை
ஒழுக்கம் கருணைதவம் உள்ளவரை எல்லாம்
இழுக்கும் பழனி யப்பனே.

சிவலிங்கப் பெருமான்

[25–மகேசுவர மூர்த்தங்கள்]

திருமுறைக் கலைஞர்
வித்துவான்; தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்கள்
திருச்சிராப்பள்ளி–2

[மலர்–26 357ம்–பக்கம் தொடர்ச்சி]

சத்தியாய், விந்து வாய்மனோன் மணியாய்த்
தயங்கிய மகேசையாய், உமையாய்
தித்தில வடந்தூம் முகிழ்முலந் திருவாய்
நெடும்புகழ் வாணியாய் வேருய்
எத்திறம் இறைவன் நின்றனன் அவனுக்கு
இயைதர அத்திறம் நின்று
மெத்திய உயிரின் மலஇருள் கெடுத்து
விளங்குபூ ரணியைஏத் தெடுப்பாம்.

— *விநாயகபுராணம்*

நிட்களத்திருமேனி – இவயசிவம்:

பரசிவத்தின் ஆயிரத்தில் ஒருகூறு வலியுடையதான **நிட்களசிவவடிவம்** சுத்த (சிவ) தத்துவத்தில் உள்ளது. இச் சிவம் ஞானமே திருமேனியாகவும் சச்சிதானந்தப் பொருளாகவும் உடையது. இது **நின்மலசிவம்** எனவும் பெயர்பெறும். நிட்களசிவத்துடன் ஞான சத்தி தனித்து நின்றும், கிரியா சத்தி தனித்து நின்றும் பொருந்தி வியாபிக்கும் நிலையில் அச் சிவம் **இவயசிவம்** எனப் பெயர் பெறும். இவயசிவம் படைத்தல் முதலிய ஐந்தொழில்களைச் செய்யும் இச்சையுடையது.

நின்மலசிவம், ஞான சத்தியைப் பொருந்தியபோது **சிவன்** என்றும், கிரியா சத்தியைப் பொருந்தியபோது **சத்தி** என்றும் பெயர் பெறும்.

இச்சாசத்தி மட்டும், எங்கும் எப்பொழுதும் ஒரு ன்மையாகவே பொருந்தி வியாபித்து நிற்கும் இயல்புடை

யது. ஞானசத்தி கிரியசத்தி இரண்டும் தனித்தனி நின்றும், இரண்டும் ஒத்து நின்றும், ஒன்று ஏறியும் ஒன்று இறங்கியும் பொருந்தி நிற்கும் இயல்புடையன.

நிட்களசிவம் - நின்மலசிவம் – இவயசிவம் எ மு தி க் காட்ட கண்ணுல் காண இயலாது; மனத்தால் தியானித்து வழிபடத்தக்கது; ஆனுல் அவன் அருளே கண்ணுகக் கொண்டு காணவல்ல சோதியாம்.

நிட்கள மூர்த்தியினைப் **பரலிங்கம்** அல்லது **அருவலிங்கம்** என்றும் சொல்லப்பெறும்.

சகளநிட்களத் திருமேனி - போகசிவம்:

சகளநிட்களச் சிவவடிவம் சாதாக்கிய தத்துவத்தில் உள்ளது. சகளசிவம், தம்மை ஆன்மாக்கள் அன்பினுல் நினைத்துப் பூசித்து வழிபடும் பொருட்டு நிட்களசிவத்தில் ஆயிரத்தில் ஒரு கூறுகவந்து நிற்பதே **சகளநிட்களம்** எனப் படும். சகளநிட்களச் சிவத்துடன் ஞான சத்தியும் கிரியா சத்தியும் சமமாகப் பொருந்தி வியாபிக்கும் நிலையில் அச்சிவம் **போகசிவம்** எனப் பெயர் பெறும். போகசிவம் படைத்தல் முதலிய ஐந்தொழில்களைச் செய்ய எழுச்சியுடையது.

தூய்மையான வானவெளியில் வானவில் தோன்றுதல் போல நிட்களமூர்த்தியும் சகளமூர்த்தியும் கலந்திடுதலால் அது, **சாதாக்கியம்** எனப்படும்.

> " நிட்களம் அதனில் சகளம் நிறைந்திடும்
> அப்பெயர் சாதாக் கியம்என ஆகும் "
>
> — *சதாசிவருபம்*

சதா + ஆக்கியம் = சாதாக்கியம்; தீர்க்கசந்தி. சதா – எப்பொழுதும், ஆக்கியம்-புகழப் பெறுவது. ஆகவே, வடிவம், நிறம் பெயர் முதலியன இல்லாத நிட்களம் சகளத் தில் கலந்து வடிவம், நிறம் பெயர் முதலியன உடையதாய் அன்பர்களால் புகழப் பெறுவது **சாதாக்கியம்** என்பதாம்.

சாதாக்கியம் **சிவசாதாக்கியம்**, **அமூர்த்திசாதாக்கியம்**, **மூர்த்திசாதாக்கியம்**, **கர்த்திருசாதாக்கியம்**, **கன்மசாதாக்கியம்**

என ஐவகைப்படும். இவ்வைந்து சாதாக்கியமும் முறையே பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என்ற ஐவகை, சிவசத்திகளிடம்-ஒவ்வொரு சத்தியினிடமும் பத்தில் ஒருகூறு வலியுடையதாகத் தோன்றியவை; மிக்கப் பிரகாசமுடையவை.

விறகில் தோன்றும் அக்கினி விறகின் மேற்பட்டுத் தோன்றுதல்போலச் சிவசத்திகளிடமாகத் தோன்றிய சாதாக்கியங்கள், அச்சிவ சத்திகளுக்கு மேம்பட்டுத் திகழும் என நூல்கள் கூறும்.

சிவசாதாக்கியம் முதலிய ஐந்து சாதாக்கியங்களுக்கும் முறையே சதாசிவன், ஈசன், பிரமீசன், ஈசுவரன், ஈசானன் என்ற ஐந்து மூர்த்திகளும் **அதிபமூர்த்திகளாவர்.** சாதாக்கியம் **நிட்களவடிவம்** அதிபமூர்த்தி **சகளவடிவம்.** ஆகவே, சாதாக்கியமும் அதிபமூர்த்தியும் கூடிய நிலையே **சகளநிட்களவடிவம் - அருவுருவ வடிவம்-சிவலிங்க வடிவம்.**

சிவலிங்கத்தில் கண்ணால் காண வல்லது உருவம்-சகளம் இன்ன உருவம் என்று கூறமுடியாமலும் அவயவ உறுப்புகள் இல்லாமலும் இருத்தல் அருவம்-நிட்களம். ஆகவே, உருவம் உளது; அவயவ உறுப்புகள் இல்லை. இவ்விரண்டு தன்மைகளும் உடையதே **சிவலிங்கவடிவம்-அருவுருவத் திருமேனி.**

> "காணாத அருவினுக்கும் உருவினுக்குங் காரணமாய்
> நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்"

(குறி – அடையாளம்) — *சாக்கியர் பெரியபுராணம்*

சிவலிங்கம் என்பது சிவமே; சிவத்தின் பெயராகிய இலிங்கம் என்ற சொல் உபசாரம். (லிங் + கம் = லிங்கம்) (லிங்-லயம், ஒடுக்கம். கம்-தோற்றம்.) இலிங்கம் என்பது அழித்தல் காலத்தில் சகல உலகமும் ஒடுங்குவதற்கும், பின்பு படைத்தல் காலத்தே யாவும் தோன்றுவதற்கும் இடமாக இருப்பதாம். படைத்தல் முதலியவற்றால் உலகத்தைச் சித்திரித்தலாகிய பரசிவத்தின் பிரபாவமே இலிங்கம். இது, கல், மணி, படிகம், பொன், வெள்ளி, செம்பு, மரம், மண்

முதலியவற்றில் ஏதேனும் ஒன்ருல் அமைத்துள்ள வடிவம் ஆகும்.

சிவலிங்க வடிவில் சிவபாபம் (உருத்திரமாகிய குழவி – தாணு–வைரத்தூண்) ஞானசத்தி. சிவபாபத்தின் கீழே உடுக்கை வடிவுபோல் அமைந்திருக்கும் பீடத்தின் மேல் பாகம் (அதாவது ஒருபக்கமாக நீண்ட கோமுகி பொருந்திய ஆவுடையாளாகிய பீடம்) கிரியாசத்தி கீழ்வட்டமாகிய பீடம் இச்சாசத்தி இம்மூன்றிலும் பராசத்தி, ஆதிசத்தி இருவரும் கலந்து வியாபித்திருப்பர். ஆகவே, இலிங்கம் பஞ்சசத்தி வடிவமாகும்.

இன்னும் இலிங்கச் சிவபாபம் சிவவடிவம். பீடம் அருட் சத்திவடிவம். ஆகவே, இலிங்கம் சிவசத்திவடிவமுமாம்.

அன்றியும் இலிங்கக் கீழ்ப்பீடம் பிரமவடிவும், மேலுள்ள ஆவுடையான்பீடம் விஷ்ணுவடிவும், சிவபாபம் (குழவி) உருத்திரவடிவும் ஆம். ஆகவே, இலிங்கம் திரிமூர்த்திவடிவ மாகும். (பீடம்-இலிங்கம் இருக்கும் ஆசனம்.)

சிவலிங்கம், கிழக்கு அல்லது மேற்குமுகம் நோக்கி இருந் தால் அதன் கோமுகி வடக்கு நோக்கியும், தெற்கு அல்லது வடக்குமுகம் நோக்கி இருந்தால் அதன் கோமுகி கிழக்கு நோக்கியும் இருத்தல் வேண்டும் எனச் சிவாகமம் கூறும்.

சிவலிங்கச் சிவபாபத்தில் மேல் வட்டம் மேற்கு, வடக்கு, தெற்கு, கிழக்கு இவற்றின் பாகத்தில் முறையே ஈசானம், சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம் என்ற ஐந்து திருமுகங்கள்-இறைவனின் ஐந்து திருமுகங்கள் உள்ளனவாகக் கற்பித்துப் பூசிக்கப்பெறும். அதனுல் சிவலிங்கமூர்த்தியைச் சதாசிவமுர்த்தியாகவே தியானிக்கப் பெறும்.

சதாசிவமூர்த்தி ஈசானுதி ஐந்து திருமுகங்களையும் பதினைந்து திருக்கண்களையும், பத்துத் திருக்கரங்களையும், அவற்றில் பற்பல ஆயுதங்களையும் கொண்டு விளங்குபவர் ஆவர். (சதா+ஈசர்=சதேசர்-சதாசிவர்-சதாசிவமூர்த்தி).

அஞ்சு முகமுள; ஐம்மூன்று கண்ணுள
அஞ்சிநெடு அஞ்சு கரதலந் தான்உள;
அஞ்சுடன் அஞ்சுஆ யுதம்உள; நம்பிஎன்
நெஞ்சு புகுந்து நிறைந்துநின் றானே.

— *திருமந்திரம்*

சிவலிங்கம்-சிவநாபத்தின் மேல் நோக்கிய சிரசின்வட்டம் சிவசாதாக்கியத்துடன் அதன் அதிபமூர்த்தி சதாசிவன் கூடிய நிலையில் திகழ்வது **ஈசானமுகம்**; சிவநாபத்தின் மேற்குப் பாகம் அமூர்த்திசாதாக்கியத்துடன் அதன் அதிபமூர்த்தி ஈசன் கூடிய நிலையில் திகழ்வது **சத்தியோசாதமுகம்**; சிவநாபத்தின் வடக்குப் பாகம் மூர்த்திசாதாக்கியத்துடன் அதன் அதிப மூர்த்தி பிரமீசன் கூடிய நிலையில் திகழ்வது **வாமதேவமுகம்**. சிவநாபத்தின் தெற்குப் பாகம் கர்த்திருசாதாக்கியத்துடன் அதன் அதிபமூர்த்தி ஈசுவரன் கூடிய நிலையில் திகழ்வது **அகோரமுகம்**; சிவநாபத்தின் கிழக்குப்பாகம் கன்மசாதாக்கி யத்துடன் அதன் அதிபமூர்த்தி ஈசானன் கூடிய நிலையில் திகழ்வது **தற்புருடமுகம்**.

சிவலிங்கத்தில் வியாபித்து நிற்கும் சிவசாதாக்கியம் முதலிய நான்கும் ஒன்றை ஒன்றுபற்றி முடிவில் ஐந்தாவ தாகிய கன்மசாதாக்கியத்தை அடைந்து ஒன்றாய்க் கலந்து வியாபித்து நிற்பதால் கன்மசாதாக்கியமாகிய **தற்புருடமுகமே** மிக மிக விசேடமாம்.

சிவலிங்கத்தின் ஈசானம், தற்புருடம், அகோரம், வாம தேவம் சத்தியோசாதம் என்ற திருமுகங்கள் ஐந்திற்கும் முறையே, **ஈசானி**, **பூரணி**, **ஆர்த்தி**, **வாமை**, **மூர்த்தி** என்ற சத்திகள் உரியவர்களாம்.

ஈசானி என்ற சத்தியிடம் **சசினி** முதலிய ஐந்து கலை களும், பூரணி என்ற சத்தியிடம் **சாந்தி** முதலிய நான்கு கலை களும், ஆர்த்தி என்ற சத்தியிடம் **தமை** முதலிய எட்டுக்கலை களும், வாமை என்ற சத்தியிடம் இரட்டை முதலிய பதின் மூன்று கலைகளும், மூர்த்தி என்ற சத்தியிடம் **சித்தி** முதலிய

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

சிவ சிவ]

" ஆடவல்லான் "

திரு; பா. சீனிவாசன் அவர்கள்
குமரகுருபர சுவாமிகள்தொடக்கப்பள்ளி (ஆசிரியர்)
திருலோக்கி

ஆடல் கலையிலே தன்னிகர் அற்று விளங்குபவர் எவரோ? அவனே ஆடவல்லான் என்பவன். அங்ஙனமாயின் ஆடவல்லான் யார்? என்ற ஐயப்பாடு நம் உள்ளத்தே தோன்றும்.

அலகில் சோதியனுய், அம்பலத்திலே ஆடுகின்ற எல்லாம் வல்ல இறைவனே ஆடவல்லான் உலகினைப் படைத்து, காத்து, அழிக்கின்ற பரம்பொருள் தானே ஆடுகின்ருர். 64வித கலைகளிலே ஆடல்கலை மிகவும் தொன்மை வாய்ந்தது மட்டுமல்ல மிகவும் கடினமான ஒரு கலை. அந்த தெய்வீகக் கலையை முதன் முதல் உலகிற்கு அளித்த பெருமை எம் பெருமானையே சாரும்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

எட்டுக் கலைகளும் ஆக 38-கலைகளும் இலிங்கத்தில் பிரகாசித்து விளங்கும்.

சிவாலயத்திலோ அல்லது ஆன்மார்த்த சிவபூசையிலோ திருவாசல் எந்தத் திசையில் உள்ளதோ அத்திசையினை நோக்கித் தற்புருடமுகம் இருக்கும். அதற்கு இடப்பக்கத் திசைக் கோணத்தில் ஈசானமுகம் இருக்கும். மேற்குத் திருவாயிலானல் மேற்கே இருக்கும் சத்தியோ சாதமுகமும், தெற்குத் திருவாயிலானல் தெற்கே இருக்கும் அகோரமுகமும், வடக்குத் திருவாயிலானல் வடக்கே இருக்கும் வாமதேவமுகமும் கிழக்கே இருந்த தற்புருடமுகத்திற்குத் தம் தம் இடத்தை அளித்துக் கிழக்குத் திசையிலே போய் நிற்கும் எனச் சிவாகமம் கூறும்.

(தொடரும்)

அப்பெருமான் ஆடுகின்ற நிலையை சற்று ஆராய்வோம். வளைந்த புருவத்தினை உடையவர். கொவ்வைக் கனிவாயிலே சிரிப்பு. குளிர்ச்சி பொருந்திய சடை. பவளம் போன்ற மேனியிலே பால்போல் வெண்ணீறனந்தவன். அவனுடைய பாதங்களோ என்றுமே இனிமைதரக் கூடியது. ஆடுகின்ற வருக்கு உரிய அனைத்து இலக்கணங்களும் அமையப்பெற் றுள்ளவர் சிவபெருமான். அவர் ஆடற்கலையின் பெருமை யினை உலகிற்கு உணர்த்ததானே ஆடிக் காட்டினுர்.

ஆகவேதான் அப்பெருமானுக்கு, "நடராஜர்" என்ற சிறப்புப் பெயரே வழங்கி வருகின்றது? ஆடலிலே அவருக்கு நிகர் அவரேதான் ஆகவேதான் நடராஜர் என்று வழங்கப் படுகின்றது.

ஒரு காலத்தில் உமையவளுக்கும், சிவபெருமானுக்கும் ஆடல்கலையிலே போட்டி ஏற்பட்டதாகவும், அதன் பொருட்டு இறைவன் கனகசபையிலே காலைத்தூக்கி ஆடிய தாகவும், காலைத்தூக்கி ஆடமுடியாத பெண்பாவையாகிய உமையவள் தோற்று நாணித் தலைகுனிந்ததாயும் புராண வரலாறு ஒன்று உண்டு.

பொன்னம்பலத்திலே நாரதகானம் பொழிய, நந்தி மத்தளம் கொட்ட, தன் திருபாதங்களின் கீழ்அரக்கனுகிய முயலகனைக் கிடத்தி, தான் ஆடினுர். எனவே பரதக் கலையை தானே ஆடிக்காட்டி, அதன் பெருமையை உலகிற்கு எடுத்துக்காட்டிய, எல்லாம் வல்ல சிவபெருமானே "ஆட வல்லார்" என்றுகூறி, குஞ்சிதபாதனுகிய அப்பெருமானை வணங்குபவர்கள், பிறவியாகிய கடலைக் கடந்து, பேரின்ப வாழ்வு எய்துவர் என்பது திண்ணம்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சரித்திரம் — தொடர்ச்சி

மகாவித்வான் ஸ்ரீ மீனுட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றியது
அவர்களின் நூற்றுண்டு விழா நினைவு வெளியீடு

(நூலகர் வித்வான் அ. நாராயணசுவாமி அவர்கள் குறிப்புரைகளுடன்)

ஆயிடை நின்றெழுந் தறிவின் மேலவர்
மாயிரும் புவிக்கெலாம் வரங்க ணல்குபு
தாயன தங்குரு சாமி வைகுதன்
மேயதோர் திருமலை விரும்பிற் போற்றினர், 140

திருவலஞ் சுழியொடு திகழ்பட் டீச்சரம்
பொருவருஞ் சத்திமுத் தம்பொன் மேற்றளி
யருள்செறி தருபழை யாறை மற்றவுந்
தெருளுறப் பணிந்துபோய்க் குடந்தை சேர்ந்தனர், 141

முற்றிய வருட்குட மூக்கு வள்ளலார்
பற்றிய பற்பல தளியுஞ் சென்றுசென்
றெற்றிய வன்பிஞ லுவந்து போற்றினர்
சுற்றிய நகரமுஞ் சூழ்ந்து தாழ்ந்தரோ. 142

பொருதுறை புகுமயிற் புலவர் மாணவர்
விருதுறை பரிசன மேவிச் சூழ்வர
வெருதுறை தம்பிரா னினிது மேவிய
மருதுறை மாநகர் வந்து போற்றினர். 143

140. அங்கு நின்றும் நீங்கி, உலகுக்கெல்லாம் வேண்டிய வரங்களை நல்கும் தாய் போன்ற தம்முடைய தலைவராகிய குருசாமியும் தந்தைக்கு உபதேசம் செய்த பெருமாஞகிய முருகனுடைய ஆறு படை வீடுகளில் ஒன்ருகிய சுவாமி மலையை விருப்பொடும் சென்று வணங்கினர். அறிவின் மேலவர் = குமரகுருபரர் திருமலை = சுவாமி மலை.

141. திருவலஞ்சுழி, பட்டீச்சுரம், சத்திமுற்றம், மேற்றளி, பழையாறை முதலிய தலங்களைத் தரிசித்துத் திருக்குடந்தையை அடைந்தார்.

142. குடமூக்கு = கும்பகோணம்: கும்பகோணத்தில் உள்ள பல கோயில் களையும் வழிபட்டு, நகர வளமும் கண்டார்.

143. யுத்தகளத்தில் புகுகின்ற வேல் போன்ற கூர்மையான, அறிவை யுடைய புலவர்கள், மாணவர்கள், பரிசனங்கள், முதலியோர் சூழ, இடபவாகனராகிய மகாலிங்கப் பெருமான் கோயில் கொண்டருளிய திருவிடை மருதூர் சென்ருர்.

வீழ்தர மறமெலாம் விரும்பி நல்லறம்
வாழ்தர வவதரித் தோங்கு மாண்பினர்
தாழ்தர லிலாதறந் தழையப் பிப்பிலஞ்
சூழ்திரு வாவடு துறைவந் தெய்தினர். 144

அருண்மலி மாசிலா மணியை யம்மையைத்
தெருண்மலி மூலரை யரசைச் சேவியா
மருண்மலி மனத்தருட் புகாத மாண்புசால்
பொருண்மலி திருமடம் புகுதன் மேயினர். 145

பற்பல ரெதிர்கொளப் பாங்கி னேகுபு
மற்பொலி யருட்டிரு மாளி கைப்பிரான்
சிற்பர வுருநமச் சிவாய தேசிகன்
பொற்பமர் திருவடி புகழ்ந்து போற்றினர். 146

வெள்ளிய நீறுகண் மணியு மேதக
வொள்ளிய காவிதோ யுடையும் வேடமுந்
தெள்ளிய சடையுமுண் டிதமுஞ் செவ்விசால்
வள்ளிய குழாங்களை மகிழ்ந்து நோக்கினர். 147

தாதமார்க் கத்தருந் தழுவு மைந்தரென்
ரேதமார்க் கத்தரு முலப்பி லாச்சக
நீதமார்க் கத்தரு நெடுஞ்சன் மார்க்கராம்
போதமார்க் கத்தரும் பொலியக் கண்டனர். 148

---

144. பாபங்கள் அழியவும், நல்லறங்கள் வாழவும் அவதாரம் செய்த சிறப்பமைந்தவர் ஆகிய குமரகுருபரர் அறம் குறையாது தழைய அரசமரம் சூழ்ந்திருக்கும் திருவாவடுதுறைக்கு வந்தார். பிப்பிலம் = அரசமரம்.

145. மாசிலாமணி: திருவாவடுதுறை இறைவர்: அம்மையை; இறைவியை; மூலர்: திருமூலர்; அரசு = தலவிருக்ஷமாகிய அரசமரம் ஆன்மீக அறிவுச் செல்வம்மிக்க திருவாவடுதுறை மடத்திற்குச் சென்றார்

146. திருமாளிகைப்பிரான்: திருமாளிகைத் தேவர் சிற்பரஉரு: தட்சிணாமூர்த்தி கோலத்தில் இருக்கும் நமச்சிவாய தேசிகர். நமச்சிவாய தேசிகர்:ஆதிகுரு

147. வெள்ளியநீறு: வெண்ணீறு; விபூதி: கண்மணி ருத்ராட்சம் காவி தோயாடை: காவியில் தோய்த்த ஆடை; குழாம் = அடியார்கூட்டம்

148. சன்மார்க்கம், தாசமார்க்கம், சத்புத்ரமார்க்கம், சகமார்க்கம் என்று வகுக்கப்படும் இந்த நான்கு ஞானமார்க்கங்களையும் அடியார்கள் அங்கு ஒழுகுதலைக் கண்டார்.

சாற்றுமித் தானமோர் தானந் தானெனப்
போற்றுசீர்க் குருநமச் சிவாய புண்ணிய
ஞற்றுபே ரருணினை ந் தகம கிழ்ந்தனர்
தோற்றுபே ரறந்தலை யெடுப்பத் தோன்றினர். 149

தரமலி குமரசு வாமி சற்குரு
வரவர வெனத்திரு வாய்ம லர்ந்திடக்
கரமலர் குவித்தனர் வணங்கிக் காமர்சா
லுரவரு கிடனுற வுவந்து வைகினர். 150

போதத்திற் சித்தியிற் பொருந்த மற்றுள
மேதகு நூல்களிற் பலவி னுவியே
யாதரங் கூர்தெளி வுண்மை யாய்ந்தன
ரோதுநங் குரவனே யெனவுள் ளோர்ந்தனர். 151

மருவுற வளவளாய் மகிழ்ந்து பின்னெழீஇப்
பொருவரு வடமடம் பூசை யாற்றிவந்
தருள்செறி பந்தியி லமுது கொண்டனர்
வெருவிலவ் விடனெரீஇ விடைபெற் றேகினர். 152

பிரிவரும் பரிசனம் பெட்பிற் சூழ்தரப்
பரிவரும் விருதுகள் பலவு மொய்த்திடத்
திரிவரு வளஞ்செய்மா யூரஞ் சேர்ந்தனர்
புரிவரு சடையரைப் போற்றித் தாழ்ந்தனர். 153

---

149. அறம்தலையெடுக்கத் தோன்றிய குமரகுருபரர், இந்த ஸ்தானம், இடம், ஆகியன ஒரு நல்ல இடமென்று எண்ணி குருநமச்சிவாயா அருளினை நினைந்து மிக மகிழ்ச்சியுற்றார்.

150. குமார சற்குரு: குமார ஸ்வாமி தேசிகர் குமரகுருபரர் காலத்தில் குருமகா சந்நிதனமாக வீற்றிருந்தவர். வருக, வருக, எனத் திரு வாய் மலர்ந்து வரவேற்க, அவரைக் கைகூப்பி வணங்கி அவர் அருகில் இடதுபக்கத்தில் அமர்ந்தார்.

151. போதம்: சிவஞானபோதம் சித்தி: சிவஞானசித்தி மற்றும் பல சைவ சிந்தாந்த சாஸ்திரங்களில் பல விஷயங்களை வினவி, அவற்றின் தெளிவான உண்மைகளை உணர்ந்தார். 'இவர் தமது குருமகா சந்நிதானமே' என்று உள்ளத்தில் தேர்ந்தார்.

152. அங்கு நன்கு அளவளாவி, மகிழ்ந்து பின்னர், வடமடம் எழுந்து பூசை செய்து, பந்தியில் அமர்ந்து அமுதுண்டு, திருவாவடுதுறை யினின்றும் விடை பெற்றுச் சென்றார்.

153. பரிசனம்: அடியார் திருக்கூட்டம் விருதுகள்: பல்லக்கு, கொடி, காளம் முதலியன: திரிவருவளம்: குற்றமற்ற வளப்பம்; புரிவரு சடையார்: மாயூரநாதர்.

அங்குநின் றெழுந்துபோய்த் தருமை யண்ணுபு
சங்குநின் றவிர்குழைத் தரும லிங்கர்தம்
பொங்குமென் மலரடி போற்றிப் புக்கனர்
தங்குமெய்ஞ் ஞானசம் பந்தர் தந்தளி. 154

ஆவயி னெதிர்கொளு மளவி லாரொடு
மேவரு ஞானசம் பந்தர் மேன்மைமுற்
றேவற வுணர்ந்தவ ருணர்ந்து போற்றினர்
தேவரும் பெறற்கருஞ் சித்தி பெற்றவர். 155

நுவலுமித் தானமு நோக்க லாமெனக்
கவலறு மனத்திடைக் கருது மேல்வையி
லவமகல் மலரெழுந் தருள வேண்டுமா
லுவமையி லீரென வுவந்து சென்றனர். 156

திருமடத் துட்புகுந் தருளித் தேசிக
ரருகுசென் றிருந்தன ரான்ற கேள்வியின்
மருவிய பற்பலர் வந்து சூழ்ந்தனர்
பொருவற வளவளாய் மகிழ்ச்சி பூத்தனர். 157

நடைகெழு கல்வியு நயக்கு ஞானமுந்
தடையற வெழுபிர சங்க வாய்மைய
மடையுடைந் தெனக்கவி வடிக்கும் வாக்குமிக்
குடைமயி னேக்கியாங் குளர்வி யந்தனர். 158

---

154. தருமை: தருமபரம்; அண்ணுபு: அடைந்து சங்குநின்றவர்குழை: சங்கினால் ஆயகாதணி தருமலிங்கர்: தருமபுரத்திறைவர் மெய்ஞ் ஞானசம்பந்தர்: தருமபுர ஆதீன முதல்வர். தளி=கோயில

155. எதிர் கொளும் அளவிலாரொடு: வரவேற்க வந்திருக்கும் அளவற்ற அன்பர்களோடு; தேவரும் பெறற்கரும் சித்தி பெற்றவர்=தேவர் களும் பெறுதற்கரிய அருளைப் பெற்றவர்; ஞானசம்பந்தருடைய மேன்மை முற்றும் உணர்ந்தவராகிய குமரகுருபரர்.

156. தானம்: ஆதீனம்; மடம்; கவலறு: குற்றமற்ற ஏல்வயில்: பொழுதில் அவம்: துன்பம் உவமையிலீர்: ஒப்பற்றவர்.

157. திருமடம்: தருமபுரமடம் தேசிகர்: மடாதிபதிகள் ஆன்றகேள்வியின் சிறந்த கேள்வி அறிவினால்.

158. நடைகெழு கல்வியும்: சிறந்த ஒழுக்கமுடைய கல்வியும்; நயக்கும் ஞானமும்: பிறர்வியக்கும் அறிவும் தடையறவெழு பிரசங்கம்:தங்கு தடையற்ற சொல்லாற்றலும்; மடையுடைத்தென: மடையை உடைத்து ஓடும் வெள்ளம் போன்ற கவிபுகலும் வாக்கும் கண்டு மடத்தார்கள் வியப்புற்றனர்.

மாசறு பெரும்புகழ் மாசி லாமணித்
தேசிகர் பெருவளச் செந்தி லாதிபர்
வீசிய பேரருள் சுமந்த மேலவர்
தேசுசான் முகங்குறித் திதனைச் செப்புவார். 159

குற்றமில் கல்வியுங் கோதின் ஞானமு
மற்றமில் குமரவே ளருளிற் பெற்றவர்
மற்றவன் றந்தையார் மலர டித்தொழும்
புற்றவர் தமைவணங் கார்கொ லோவென்றார். 160

வெள்ளிய நீறணி மேனி யாரெலாம்
வள்ளிய தொழற்குரி மாண்ப ராயினுந்
தெள்ளிய தாயவாச் சிரம பேதத்தா
னள்ளிய விதியையு நயப்ப ரேயென்றார். 161

மனத்திடை மாசிலா திருத்தன் மாண்பற
முனப்படு பிறவெலா மோசை நீரவே
யெனப்புக லுதலெவ னென்ன மாசறன்
மினப்படு காட்சியன் றென்று விண்டனர். 162

காட்சியே கருதுதல் கந்த வேள்ருண்
மாட்சிநும் போலுநர் மரபன் றலென
வாட்சிசா லுண்மையை யறித ராவணப்
பூட்சிதா னருளொடு புணர்த ராதென்றார். 163

159. மாசிலாமணி தேசிகர் இவர் காலத்தில் தருமை ஆதீன கர்த்தர் செந்திற்குமரன திருவருளைப் பெற்ற குமரகுருபரர் மேலவர் குமர குருபரர்.

160. குமரவேளின் அருளால் குற்றமற்ற கல்வியும் ஞானமும் பெற்றவர்கள். அந்தக் குமரனுடைய தந்தையின் திருவடி மலர்க்கு அடிமை பூண்டவர்களை வணங்க மாட்டார்களா?

161. திருமேனி தரித்த மேனியர் யாவரும் தொழற்குரிய சிறப்பமைந்தவர்கள் ஆயினும் ஆச்சிரம பேதத்தால் ஏற்படும் விதியையும் கருதுவார்கள்.

162. 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன் ஆகுல நீர பிற' என்பது குறள். எனப்புகலுவதெவன்: எனக் கூறுவது என் - என்ன "மாசும் அறனும் ஓரினப்படும் காட்சி அன்று" என்று விடையளித்தார்.

163. 163–166 'இவை சைவ சித்தாந்தக் கருத்துக்கள்' கருதுதல் = எண்ணல், பூட்சி: உடல் புணர்தராது: சேராது

பிறரறி தலினெவன் வருதல் பேசுமென்
றற்மலி தருமைவா ழவரு ரைத்திட
நெறியின ரினையரென் றுணர்ந்து நீணிலங்
குறிவழி பாடுசெய் துய்யக் கொள்கென்றார். 164

ஆடல்வாம் புரவியோ ரரச ராயினர்
வேடமே பொருளெனக் கொண்டு விண்ணரு
நாடரும் பெரும்பத நண்ணி னரது
கோடலே பொருளெனப் பின்னுங் கூறினர். 165

ஐந்துபே ரறிவெனுஞ் செய்யு ளத்தமென்
முந்துநீ ரியம்புகென் றவர்மொ ழிந்திட
நந்துமச் செய்யுளின் பொருண விற்றுகே
னுந்துநீர் செம்மையேற் றுறினென் றுரரோ.* 166

வேறு

எங்க ளாரியன் மேற்றுதி யாங்களெப் போது
முங்கள் பேரரு ளாற்செயல் வேண்டுமற் றுதற்குத்
திங்கள் சூடியோன் றிருமக னாருட் செல்வ
நங்கள் வாழ்வெனப் பெற்றுளீர் நயந்தருள் புரிவீர். 167

என்று வேண்டலு மும்மணிக் கோவையொன் றியம்பி
யொன்று மாதுதித் திருமினென் றவர்கரத் துதவிச்
சென்று நீள்வட மடம்புகூஉப் பூசனை செய்து
வென்றி மேவுவார் சிலபகல் விழைந்தவ ணமர்ந்தார். 168

---

164. நீள்+நிலம்; உலகம் குறிவழிபாடு செய்து: உருவ வழிபாடு செய்து உய்ய: பிழைக்க

165. வாம்புரவி: தாவுகின்ற குதிரை

166. அத்தம்=பொருள்; நவிற்றுகேன்=சொல்லுகேன் ஆரியன் = குரு தேசிகன் உதற்கு=இதற்கு; இது, என்பது இதற்கு என்று ஆனது போல் உது என்பது உதற்கு என்றாயிற்று.

* இதன் பின்னிருந்த எ – பாடல்கள், வரலாற்று முறைமையைச் செவ்வனே தெரியாதவர்கள் சொல்லக்கேட்டுச் செய்யப்பட்டமையின், கொள்ளத் தக்கனவல்லவென்று பிள்ளையவர்கள், நாங்கள் பாடங்கேட்ட காலத்திற் சொல்லியிருந்தமையின் அவற்றை இங்கே பதிப்பிக்கவில்லை. இந்தப்பாகத்திற்குரிய பாடல்களைப் பின்பு அவர்கள் இயற்றவில்லை.

167. திங்கள் சூடியோன் திருமகனார்: குமரகுருபரர் அவர் குமரகுருபரான எங்கள் ஆதிமகா சந்நிதானத்தின் பேரில் யாங்கள் துதிக்கும் வண்ணம் ஒரு துதிநூல் செய்தருள வேண்டுமென்று கேட்டுக் கொண்டன.

168. மும்மணிக்கோவை: பண்டாரமும் மணிக்கோவை; ஒன்றுமா: ஒன்று மாறு துதித்திடுமின் என்று அவர்கள் கையில் அளித்து

மூன்றும் திருமுறையின்
முதற்பாடல்கள் — உரை

திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்

105. திருக்கலிக்காமூர் — பண்: பழம் பஞ்சுரம்

மடல்வரை யின்மது விம்முசோலை
வயல்சூழ்ந் தழகாரும்
கடல்வரை ஓதம் கலந்துமுத்தம்
சொரியும் கலிக்காமூர்
உடல்வரை இன்னுயிர் வாழ்க்கையாய
ஒருவன் கழலேத்த
இடர்தொட ராவினை யானசிந்தும்
இறைவன் அருளாமே.

பொழிப்பு: பூவிதழ்களில் எல்லையில்லாத தேன் பெருகுகின்ற சோலையும் வயலும் சூழ்ந்து அழகு அமைகின்றதும், கடலோரங்களில் அலைகள் முத்துக்களைச் சொரிக்கின்றதுமான கலிக்காரையும் உடலிடத்தே உள்ள இனிய உயிரையும் வாழ்க்கையிடமாகக் கொண்ட ஒருவனது திருவடிகளை வழிபட்டால் துன்பங்கள் தொடரமாட்டா; வினைகளும் ஒழியும்; இறைவன் திருவருளும் சித்திக்கும்.

மடல்—பூவிதழ்; வரையில்-எல்லையில்லாத; விம்மு—பெருகு; கடல்வரை-கடலோரம்; ஓதம்—வெள்ளம்; ஈண்டு அலைகளைக் குறிக்கும். அழகாரும் கலிக்காமூர் முத்தம் சொரியும் கலிக்காமூர் என இயைக்க. கலிக்காமூர் என்பது தற்போது அன்பைப் பன்பேட்டை என வழங்குகிறது. கலிக்காமூரையும் இன்னுயிரையும் வாழ்க்கையாய ஒருவன் என இயைக்க. இப்பதிகத்தை ஓதுபவரைப் பிணிகள் பொருந்தமாட்டா.

106. திருவலஞ்சுழி — பண்: பழம் பஞ்சுரம்

பள்ளம தாய படர்சடைமேற்
பயிலும் திரைக்கங்கை
வெள்ளம தார விரும்பிநின்ற
விகிர்தன் விடையேறும்

வள்ளல் வலஞ்சுழி வாணனென்று
மருவி நினைந்தேத்தி
உள்ளம் உருக உணருமின்கள்
உறுநோய் அடையாவே.

பொழிப்பு: தேங்கி நிற்கும் இடமாகிய படர்ந்த சடையின் மேல் அலை பொருந்திய கங்கை வெள்ளம் நிறையுமாறு (அதன் வருகையை) விரும்பி நின்ற விகிர்தன் என்றும், இடபத்தில் ஏறும் வள்ளல் என்றும் வலஞ்சுழி வாணன் என்றும் உள்ளம் உருகுமாறு நினைந்து (அவ்வலஞ்சுழியாய இடத்தைச்) சேர்ந்து துதித்து (அவனது அருட்செயலை) உணருங்கள்; அங்ஙனம் உணர்ந்தால் மிகுநோய் எவையும் அடையமாட்டா.

பள்ளம்—நீர் தேங்கி நிற்கும் இடம். சடையில் கங்கை தேங்கி நிற்பதால் சடையைப் பள்ளம் என்றார். திரைபயிலும் கங்கை என மாறுக. ஆர—நிறை. விகிர்தன்—உலகியலுக்கு மாறுபட்டவன். வாணன்-வாழ்பவன். மருவுதல்—சேர்தல். உள்ளம் உருக நினைந்து மருவி ஏத்தி உணருமின்கள் என மாறுக. உறுநோய்—மிக்க பலவான துன்பங்கள். இப்பதிகத்தை ஏத்த வல்லவர்க்கும் அவரது சுற்றத்தார்க்கும் ஊழிக் காலம் வரை இன்பமும் புகழுடம்பும் உயர்ந்த சிவகதியும் கிடைக்கும்.

———

(தொடரும்)

உ
சிவ சிவ

சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

தமிழன்பர்களுக்கோர் அறிவிப்பு

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த

கந்தர்கலி வெண்பா

சகலகலாவல்லிமாலை

தெளிவுரையுடன் சிறந்த நான்காம் புதிய பதிப்பு
நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்தது

திருமுறைக் கலைஞர் வித்துவான் தி. பட்டுச்சாமி
ஓதுவாரவர்களின் சீரிய சேவை
பதவுரை-பொழிப்புரை—விளக்கம்—சைவ சித்தாந்த
கருத்துக்களின் தெளிவு இலக்கண இலக்கிய
குறிப்புகள் ஒப்புமைப்பகுதி பொருளடக்கம்
ஆராய்ச்சி குறிப்புகளுடன் விரிவுரையும்
கொண்டது.

பதிப்பாசிரியர்

K. சுப்பிரமணியன்

மானேஜிங் டிரஸ்டி- ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்
மடங்கள்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் திருமுறை வெளியீடுகள்

		ரூ	பை
1	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) ...	3	50
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த காசிக்கலம்பகம் மூலமும் அரும்பதக்குறிப்பும் ...	0	40
3	,, சிதம்பர மும்மணிக்கோவை ,, ...	0	20
4	,, மதுரைக்கலம்பகம் ,, ...	0	40
5	,, மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ் ,, ...	0	60
6	திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா-மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ்—மதுரைக்கலம்பகம்—நீதிநெறி விளக்கம்—மதுரை மீனுட்சியம்மை இரட்டைமணிமாலை மதுரை மீனுட்சியம்மை குறம் ...	2	70
7	திருவாரூர் நான்மணிமாலை—முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ...	1	25
8	திருவாரூர் நான்மணிமாலை உரையுடன் ...	0	50
9	சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ...	1	00
10	பண்டார மும்மணிக்கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை ...	1	00
11	நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும், ஹிந்தியும் ...	0	50
12	நீதிநெறி விளக்கமும் நன்னெறியும்—மூலம் ...	0	15
13	கந்தர்கலிவெண்பா மூலம் மட்டும் ...	0	10
14	கந்தர் கலிவெண்பா (புதிய பதிப்பு) ...	0	05
15	அபிராமியந்தாதி மூலம் ...	0	15
16	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ...	5	25
17	திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ...	3	75
18	சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ...	2	75
19	திருவாசகம் மூலம் (புதியபதிப்பு) ...	1	65
20	திருக்கோவையார் (பேராசிரியருரையும்பழையவுரையும்) ...	4	50
21	9-ம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு மூலம் ...	0	56
22	,, ,, தெளிவுரை ...	3	25
23	பெரிய புராணம் (மூலம்) புதிய பதிப்பு ...	6	75
24	பதினோராந் திருமுறை (புதிய பதிப்பு) ...	3	50
25	பேராயிரப் பனுவல்கள் ...	0	10
26	திருத்தொண்டர் புராணசாரம் ...	0	40
27	அம்மையார் அற்புதத் திருவந்தாதி ...	0	25
28	திருக்கைலாய ஞானவுலா-உரையுடன் ...	0	50
29	திருக்கயிலைத் திருமுறை ...	0	37
30	பழமொழித் திருமுறை ...	0	25
31	அப்பர் விழா வெளியீடு ...	0	
32	Hymns and Proverbs ...	0	
33	திருவாரூர்-திருப்பனுவல்கள்		

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No. 1485/57.

34	குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத் திரட்டும் ...	0	30
35	கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்) ...	1	75
36	திருவாசகம் தேனும் கனியும் ...	0	15
37	தேவாரம் பாடும்பயன் ...	0	15
38	காசிக்கலம்பகம் உரை நடை ...	0	15
39	தாழைத் திருமுறை ...	0	15
40	ஐந்து நீதி நூல்கள் ...	0	10
41	நவக்கிரகமாண்பு ...	0	25
42	ஸ்ரீ சைலம் ...	0	10
43	திருவுசாத்தனக் கல்லெழுத்துக்கள் ...	0	37
44	செந்திலாண்டவன் மகிமை ...	0	15
45	திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் (4-ம் பதிப்பு) ...	2	00
46	திருமுருகாற்றுப்படை ...	0	15
47	தேவார வைப்புத்தல விளக்கம் ...	0	15
48	திருக்குறள் மணக்குடவர் உரை (முப்பாலும் சேர்ந்தது) ...	2	00
49	திருக்குறள் (மூலம்) ...	0	25
50	திருக்குறள்-அறத்துப்பால்-சிற்றுரை ...	0	20
51	முதுமொழிமேல்வைப்பு (குறிப்புரை) ...	0	60
52	திருக்குறள் அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழிபெயர்ப்பும் ...	1	50
53	திருக்குறள்-பொருட்பால் ...	2 ·	50
54	திருக்குறள்-காமத்துப்பால் ஷ 53, 54, 55, திருக்குறள் 2 புத்தகமும் ...	4	00
55	கந்தர்கலிவெண்பா சகலகலாவல்லிமாலை ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புடன் ...	1	25
56	திருவருட்பயன் மூலம் இந்தி, ஆங்கிலமொழிபெயர்ப்புடன் ...	1	00
57	சிவகொழுந்து தேசிகர் பிரபந்தம் ...	3	00
58	அகத்தியர் தேவாரத்திரட்டு (புதிய பதிப்பு) ...	0	50
59	மங்கலம் ...	0	20
60	திருஆனைத் திருமுறையும் உருத்திராக்க விதானமும் ...	0	20
61	கோதனத் திருமுறை ...	0	16
62	தோடுடைய செவியன் கோவண ஆடையன் ...	0	15
63	பண்டார மும்மணிக்கோவை உரைநடை ...	0	15
64	மகேசுவரபூசை ...	0	15
65	திருமந்திரம் (அச்சில்)		
66	திருவிசைப்பா தேனும் கனியும் ...	0	10

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்,
"தியாகராஜ விலாசம்" 53. பிள்ளையார் கோவில்தெரு.
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி. சென்னை-600005.

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம். 628601